விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper In Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 05 புதன்கிழமை (20.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

## பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர் உட்பட
# 3 தமிழ் மாணவர்களை கைது செய்ய உத்தரவு!

(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதன்படி நேற்றையதினம் மாணவர் ஒன்றிய தலைவர் உட்பட தமிழ் மாணவர்கள் மூவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்வதற்கு முயன்றுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## கைதான பசில் வைத்தியசாலையில்



(கொழும்பு)

திவிநெகும திணைக்களத்தின் நிதியில், பிளாஸ்டிக் குழாய்களைக் கொள்வனவு செய்ததில் இடம் பெற்றதாக மோசடி தொடர்பில் கைது செய்யப் 24ஆம் பக்கம் பார்க்க....




## முஸ்லிம் மக்கள்; எங்களுடைய மக்கள்
### கனேடியன் எம்.பியிடம் மாவை எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹறி ஆனந்தசங்கரியிற்கும் இலங்கை தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விஷேட சந்திப்பு நேற்று யாழ்ப்பாணம் மார்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இங்கு கருத்துக்கூறிய கனேடிய பாராளுமன்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## ரூபாய் 16 கோடி மதிப்புள்ள வெளிநாட்டு பணம் பறிமுதல்



23ஆம் பக்கம் பார்க்க....

## இனவாதத்துக்குரிய தூண்டல்கள் பல்கலையில் இடம்பெறவில்லை
### துணைவேந்தர் எடுத்துரைப்பு



(கொழும்பு)

இனவாதத்தை தூண்டக்கூடிய பிரச்சினைகள் எவையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவில்லை என யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார். யாழ் பல்கலைக்கழக 23ஆம் பக்கம் பார்க்க....

## இன வேறுபாடுகள் இன்றி யாழ்.பல்கலை இயங்கும்
### அமைச்சர் சுவாமிநாதன் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற இன வேறுபாடு இல்லாமல் யாழ்.பல்கலைக்கழகம் தொடர்ந்தும் இயங்கும் என இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு நேற்றையதினம் 23ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தாவும் கைதாகலாம்!



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் முக்கியஸ 24ஆம் பக்கம் பார்க்க....

## பிற இன மாணவர்களை மதிக்கிறோம்; எமது கலாசாரத்தை விட்டுக்கொடோம்
### பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் விளக்கமளிப்பு

(யாழ்ப்பாணம்)

பிற இன, மத மாணவர்களுக்கான மதிப்பினை நாம் எப்போதும் வழங்குகிறோம்.

ஆனால் எங்கள் இன, மத கலாசாரத்தை நசுக்குவதற்கு எவருக்கும் இடமளிக்க மாட்டோம் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சிசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக அமைச்சர் குழுவினருடன் மாணவர்களுக்கிடையே நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் 23ஆம் பக்கம் பார்க்க....


## ஜனாதிபதி, பிரதமர் இல்லாத போது ஆட்சியைப் பிடிப்பாரா பொன்சேகா
### விமல் வீரவன்ஸ விநோத கேள்வி



(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகிய மூவரும் இன்று நாட்டில் இல்லை. இந்நிலையில் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவிற்கு வேறு யோசணை தோன்றி விட்டால் என்ன செய்வது என பாராளுமன்ற உறுப் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# தமிழருக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி முன் சம்பந்தன் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.**

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் ஜேர்மனி அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

ஜேர்மனி அரசாங்கத்தின் சுமார் 80 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் மகிந்த சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அங்கஜன் இராமநாதன், கே.கே.மஸ்தான், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோரும் கலந்து கொண்டிருந்த இந்த திறப்பு விழா நிகழ்வில் சம்பந்தன் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"கிளிநொச்சி அறிவியல் நகருக்கு இந்த தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஒரு வரப்பிரசாதம். இதற்காக ஜேர்மனி அரசாங்கத்துக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். இந்த தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தைப் பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்ட மக்கள் உச்சப் பயனைப் பெற வேண்டும். இதன் மூலம் எமது சமூகம் நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

உலக அளவில் ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழும் ஜேர்மனி, உலக நாடுகளில் பொருளாதார ரீதியில் சக்தி வாய்ததாகவும் திகழ்கின்றது. இவ்வாறானதொரு முன்னேற்றமே இலங்கைக்கும் வேண்டும். போர்ச்சூழலைக் கடந்த நாம் இவ்வாறான மாற்றங்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்றதும் மக்கள் மத்தியில் நம்பிக்கை துளிர்த்தது. புதிய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து நாட்டினை சிறந்த பாதைக்கு இட்டுச் செல்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து உறுதியான தேசிய அரசாங்கமாக செயற்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் அனைத்து இறையாண்யுள்ள குடிமக்களையும் உள்ளடங்கிய அரசியலமைப்பு ஒன்று இன்மையே தற்போது காணப்படும் முக்கிய பிரச்சினை. 1972 மற்றும் 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்கள் பிரதான எதிர்தரப்பினரின் பொதுவான இணக்கபாடு இன்றி, பெரும்பான்மை சிறுபான்மை மக்களின் பொதுவான இணக்கப்பாடு இன்றி அந்த காலப் பகுதியில் உருவாக்கப்பட்டன.

அதனாலேயே இந்த நாடு செழிப்புமிக்கதாக மாறவில்லை. அதனாலேயே இந்த நாடு முன்னோக்கி செல்லவில்லை. ஏனெனில் இந்த நாட்டிற்கு அனைத்து இறையாண்மையுள்ள குடிமக்களுக்கான உச்சபட்ச சட்டமொன்று இல்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் இன்று அனைத்து மக்களினதும் அரசியல் கட்சியினதும் பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலான அரசியலமைப்பை மறுசீரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


பொதுவான இணக்கப்பாடுடன் உச்சபட்ச அதிகாரத்தை பெற்றுத்தரும் அனைத்து இறைமையுள்ள குடிமக்களையும் உள்ளடங்கிய அரசியலமைப்பு உருவாக்குவதில், மிகவும் சாதகமான பங்களிப்பை வழங்குவதற்கு தமிழ் மக்களும், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் கரிசனையுடன் உள்ளது.

தற்போது எமது ஜனாதிபதி மூலம் அரசியலமைப்பு மாற்றி அமைக்கப்படுவதற்கான சாதமான சூழல் நிலவி வருகின்றது. தமிழர்களின் குரல்கள் கேட்கப்பட்டு வருகின்றது. நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்த நாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்க உரிமை உண்டு. தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் சுதந்திரமான, சுயாதீனமான கல்வியைப் பெறவேண்டும். இந்தப் பல்கலைக்கழத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்களிடம் வேறுபாடுகளோ, அச்ச உணர்வுகளோ இருக்க வேண்டியதில்லை.

நாடு தழுவிய ரீதியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்க வேண்டும். பாதுகாப்பான விதத்தில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். இவற்றுக்கான உடனடித் தீர்வு காண்ப்பட வேண்டும். மூடப்பட்ட யாழ்.பல்கலைக்கழகம் மிகவிரைவில் திறக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என சம்பந்தன் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (செ-11)

# மோதலை ஆராய வந்த அமைச்சர்கள் த.தே.கூட்டமைப்புடன் நேற்று சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களிடையே கடந்தவாரம் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள கல்விச்செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த அமைச்சர் குழுவினர் பல்வேறு மட்டங்களிடையே நேற்றையதினம் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர்.

அந்தவகையில் நேற்றைய தினம் கொழும்பிலிருந்து அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், அனுர பிரியதர்சன யாப்பா, பிரதி அமைச்சர் கருணாரத்தன பரணவித்தாரண ஆகியோர் குறித்த கலந்துரையாடலை பல்வேறு மட்டத்தினருடன் மேற்கொண்டிருந்த னர்.

இவர்கள் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்களுடனான சந்திப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும், சிவில் சமூகத்தினருடனான சந்திப்பை யாழ் மாவட்டச் செயலகத்திலும், நடத்தியிருந்தது டன் யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர். (செ-9)

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்துக் கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.
ஆலோசனையும் மதீப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.
(4919)
தொடர்புகளுக்கு: ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

# வீதி விபத்தில் இளைஞன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, பன்குடாவெளிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் கொம்மாதுறையைச் சேர்ந்த கந்தசாமி ஜெயராஜ் (வயது 23) என்பவர் பலியானார்.

வீட்டிலிருந்து இலுப்படிச்சேனையிலுள்ள கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் இவர் சென்று கொண்டிருந்த போது, வீதியில் கட்டாக்காலி மாடுகள் குறுக்கிட்டதன் காரணமாக விபத்து இடம்பெற்றுள்ளது. (செ-11)

# சம்பள உயர்வு கோரி போராட்டம்

(கொழும்பு)

கொட்டகலையில் சம்பள உயர்வு இன்றி தொழிலாளர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து சாத்வீகமாக தெளிவூட்டும் போராட்டம் இடம்பெற்றது.

தோட்ட தொழில் நடவடிக்கை மற்றும் பாடசாலையின் கல்வி நடவடிக்கை வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கை போன்ற பல விடயங்களில் சம்பள உயர்வு இன்றி தொழிலாளர்கள் வாழ்வதால் முற்றிலும் பாதிக்கப்பட்டு வருவதாக வலியுறுத்தி இந்த போராட்டம் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சர்வோதய அமைப்பு மற்றும் சிவில் அமைப்புகள் உள்ளடங்கலாக ஜே.வி.பியின் ஆசிரியர் அமைப்பு, தோட்டத் தொழிலாளர்கள், கொட்டகலை வர்த்தக சங்கத்தினர் ஆகியோரின் ஆதரவுடன் இந்த சாத்வீக போராட்டம் இடம்பெற்றது.

கொட்டகலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முற்றத்தில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் 250இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காலம் தாமதிக்காத சம்பள உயர்வை அரசாங்கம் மற்றும் சம்மந்தப்பட்ட அமைப்புகளின் அதிகாரிகள் பெற்றுக்கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சம்பள உயர்வு இன்றி பாதிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் மந்த போஷனத்தால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த போராட்டத்தின் போது, ஆலய வழிபாட்டுடன், சம்பள உயர்வை வலியுறுத்திய வீதி நாடகம் போன்றன இடம்பெற்றது.

இதேவேளை, கொட்டகலை நகர வர்த்தகர்கள் தங்களின் வர்த்தக நிலையங்களை ஒரு மணி நேரமாக அடைத்து இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். (செ-11)

# சட்டத்தை கையில் எடுக்க யாருக்கும் உரிமையில்லை



## அமைச்சர் கிரியெல்ல எச்சரிக்கை

(கொழும்பு)

**எந்தவொரு நபருக்கும் சட்டத்தை கையில் எடுக்க உரிமை இல்லை எனவும் யாழ்.பல்கலைக்கழக மோதல் விவகாரத்தில் தொடர்புடையவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரித்துள்ளார்.**

யாழ் - பல்கலைக்கழக மோதலில் காயமடைந்த மாணவர்களை பார்வையிட வைத்தியசாலைக்கு சென்ற போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற புதிய மாணவர்களின் வரவேற்பு நிகழ்வின் போது இடம்பெற்ற சிறிய மோதலை சிலர் பெரிதாக்கி பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் வெளியில் உள்ள சிலர் ஈடுபட்டுள் ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சரியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (இ-10)

## 83 ஜூலை கலவரத்திற்கு பின்னர் மூடப்பட்ட புறக்கோட்டை கடைகள்

### ஞாபகப்படுத்திய பந்துல

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது மூடப்பட்ட புறக்கோட்டை வர்த்தக நிலையங்கள் மீண்டும் இந்த வருடம் ஜூலை மாதமே மூடப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பெறுமதி சேர் வரி திருத்தம் காரணமாக சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு அறவிடப்பட்ட வரி காரணமாக இந்த ஜூலையில் இவ்வாறு புறக்கோட்டையில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பு புஞ்சி பொறளையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள் ளார்.

அமைச்சர்களான திகாம்பரம், மனோ கணேசன்,



நாடாளுமன்ற உறுப்பினர் முஹிபுர் ரஹ்மான் போன்றோர் அண்மையில் புறக்கோட்டை நகருக்கு சென்று வர்த்தக நிலையங்களை மூட வேண்டாம் என வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரசாங்கத்தில் உள்ள சிலர் கடைகளை ஏன் மூடுகின்றனர் என்ற உண்மையான பிரச்சினையை அறிந்து கொள்ளாமல், கடைகளை மூடப் போகும் வர்த்தகர்களை தேடிச் சென்று அவர்கள் தொடர்பில் வேறு நடவடிக்கை எடிடுக்க முயற்சித்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை செயற்படுத்துவதையே அரசாங்கம் செய்ய வேண்டும்.

வரவு செலவுத்திட்டத்தில் பெறுமதி சேர் வரி 11 வீதமே அறவிடப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் சில்லறை மற்றும் மொத்த விற்பனை வர்த்தகத்திற்கு பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப் பட்டிருக்க வில்லை.

அரசுக்கும் நாடாளுமன்றத்திற்கும் இருக்கும் நாட்டின் நிதி அதிகாரத்தை நிதியமைச்சர் தான்தோன்றித்தனமாக தனக்குரிய அதிகாரமாக கருதி செயற்பட்டதன் காரணமாகவே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனவும் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (இ-10)

## திடீரென தீப்பற்றிய பயணிகள் பேருந்து




சீனாவின் Taoyuan நகரில் சுற்றுலாப் பயணிகளின் பேருந்து நேற்றுக்காலை திடீரென தீ பிடித்ததில் 26 பேர் உயிரிழந்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

சீனாவில்உள்ள தேசிய நெடுஞ்சாலை பகுதியிலேயே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

வடக்கு சீனாவிற்கு சுற்றுலா செல்லவிருக்கும் பயணிகளை Taoyuan விமான நிலையத்திற்கு அழைத்து செல்லும்போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் 24 சுற்றுலாப் பயணிகள்,ஒரு வழிகாட்டி மற்றும் சாரதி ஒருவரும் உள்ளடங்குவதாகவும் விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.(இ-10)

## ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைத் திகதிகள் வெளியீடு

இந்த வருடத்திற்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையினை ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நடத்தவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம் முறை 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைகள் 2,959 பரீட்சை நிலையங் களில் நடைபெறவுள்ளதுடன் 3 இலட்சத்து 50 ஆயிரத்து 701 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, விண்ணப்பதாரிகளின் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் பாடசாலைகளின் அதிபர்களுக்கு நேற்று முன்தினம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

குறித்த நுழைவுச்சீட்டுக்கள் கிடைக்கப் பெறாவிடின் 1911 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு எதிர்வரும் 29 ஆம் திகதிக்குள் அறிவிக்குமாறும் பரீட்சைகள் திணைக்களம் அதிபர்களை கேட்டுக் கொண்டுள்ளது. (இ-10)

## கூட்டு எதிரணியில் இணையுமாறு விஜேலாலுக்கு மகிந்த அழைப்பு

கூட்டு எதிர்க்கட்சியினருடன் இணைந்து போராட்டத்தை வெற்றி கொள்ள உதவுமாறு தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜேலாலுக்கு அழைப்பு விடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தென் மாகாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைக்க பார்க்கின்றனர். அத்தோடு நாட்டை இரண்டாக பிளவுப்படுத்த போகின்றனர். யாரை சிறையில் அடைத்தாலும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை நாங்கள் கைவிட மாட்டோம்.

அரசாங்கம் எங்களை பழிவாங்குகிறது.பொய் வழக்குகள் தொடரப்படுகின்றன.

இதனால், ஷான் விஜேலால் எம்முடன் இணைந்து எமது வெற்றிக்கு உதவுமாறு அழைப்பு விடுக்கின்றேன் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்

இதனிடையே அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய தென்மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜேலால், கிரிஷ் நிறுவனத்திடம் நாமல் ராஜபக்ஷ 70 மில்லியன் ரூபாவை பெற்றதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனை பழிவாங்கல் என்கின்றனர். இதில் என்ன பழிவாங்கல் இருக்கின்றது.

கொள்ளை, மோசடிகளுக்கு எதிராக அரசாங்கம் விசாரணை நடத்தி குற்றம் செய்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தினால், அது பழி வாங்கலாம். இது எப்படி பழி வாங்கலாகும் என ஷான் விஜேலால் கேள்வி எழுப்பியுள்ளார்.

தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜேலால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அணியில் அங்கம் வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-10)

# ரஸல் சகலதுறையிலும் அசத்தல் தல்லாவாஸ் அணி வெற்றி

கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் கெய்ல் அவுட் ஆனாலும், ஆந்த்ரே ரஸல் அதிரடி மற்றும் அபார பந்து வீச்சால் தல்லாவாஸ் அணி வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகளில் கரீபியன் பிரீமியர் லீக் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றைய போட்டியில் கெய்ல் தலைமையிலான ஜமைக்கா தல்லாவாஸ் அணியும், பிராவோ தலைமையிலான ட்ரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணய சுழச்சியில் வென்ற ட்ரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி முதலில களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி ஜமைக்கா தல்லா வாஸ் அணியின் கப்டன் கிறிஸ் கெய்ல், வால்டன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

9 பந்துகளை சந்தித்த கெய்ல், ரன் கணக்கை தொடாங்காமல் டக்அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். அடுத்து சங்ககார களம் இறங்கினார். வால்டன் 11 பந்தில் 2 பவுண்ட ரியுடன் 16 ரன்கள் சேர்த்தார். சங்ககார தன்பங்கிற்கு 21 பந்தில் 23 ரன்கள் எடுத்தார்.




அடுத்து வந்த பொவேல் 34 பந்தில் 2 பவுண்டரி, 4 சிக்சருடன் 44 ரன்கள் குவித் தார். 6-வது வீரராக களம் இறங்கிய ஆந்த்ரே ரஸல் 24 பந்தில் 5 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 44 ரன்கள் சேர்த்து கடைசி பந்தில் ஆட்டம் இழந்தார். இவரது பொறுப் பான ஆட்டத்தால் ஜமைக்கா தல்லாவாஸ் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 158 ரன்கள் சேர்த்தது . ட்ரின்பாகோ அணி சார்பில் கூப்பர் 3 விக்கெட்டும், பிராவோ 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

அதன்பின் 159 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ட்ரின்பாகோ அணியின் அம்லா, மக்கல்லம் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஒருபுறம் அம்லா நிலைத்து நிற்க மறுபுறம் மக்கல்லம் (6), கொலின் முன்றோ (1), பெர்கின்ஸ் (12), உமர் அக்மல் (11) என அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். அம்லா 36 பந்தில் 2 பவுண்டரி, 2 சிக்சருடன் 42 ரன்கள் சேர்த்தார்.

6-வது வீரராக களம் இறங்கிய ராம்தீன் 31 ரன்கள் சேர்க்க, அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ரன்களில் அவுட்டாகினர். இதனால், ட்ரின்பாகோ அணியால் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 139 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. எனவே, கெய்ல் அணி 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது,

பேட்டிங்கில் கலக்கிய ரஸல், பந்து வீச்சிலும் மிரட்டினார். அவர் 4 ஓவர்கள் வீசி 23 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். ஸ்டெயின் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் ஜமைக்கா தல்லாவாஸ் அணி புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ளது. . (க)



## ஒலிம்பிக் வீரர்களை வழியனுப்பிய ஏ.ஆர்.ரஹ்மான் - சல்மான் கான்

பிரேசிலில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீர வீராங்கனைகளை வழியனுப்பும் விழாவில் இந்தி நடிகர் சல்மான் கான்,இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் கலந்து கொண்டனர்.

பிரேசில் நாட்டில் உள்ள ரியோ டி ஜெனி ரோ நகரில் ஒலிம்பிக் போட்டி வரும் ஒகஸ்ட் 5-ம் திகதி முதல் 21-ம் திகதி வரை நடைபெறுகிறது.தொடர்ந்து செப்டம்பர் 7-ம் திகதி முதல்18-ம் திகதி வரை பாரா ஒலிம்பிக் போட்டிகள் ரியோவில் நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்க இந்திய சார்பில் 121 வீர,வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இவர்களை வழியனுப்பும் நிகழ்ச்சி



நேற்று முன்தினம் டெல்லியில் நடை பெற்றது.இதில் இந்தியாவின் ஒலிம்பிக் தூதர் களான இந்தி நடிகர் சல்மான் கான், இசைய மைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் விஜய்கோயால் கலந்து கொண்டனர். (க)


MORA TAMILS 2018

## மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 7 வது முன்னோடிப் பரீட்சை - 2016

## முன்னிலைப் பெறுபேறுகள்

### கணிதப் பிரிவு

| # | Name | District | Maths | Physics | Chemistry | Z Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kajaroganan Kajanan | Jaffna | A | A | A | 2.9034 | 1 |
| 2. | Raveendran Banupriyan | Jaffna | A | A | A | 2.8988 | 2 |
| 3. | Sivanantharasa Vithakan | Jaffna | A | A | A | 2.7933 | 3 |
| 4. | Kanagalingam Shanggeeth | Jaffna | A | A | A | 2.7867 | 4 |
| 5. | Ravikkumar Thiruparan | Jaffna | A | A | A | 2.755 | 5 |
| 6. | Sivapalan Shankeerthan | Jaffna | A | A | A | 2.727 | 6 |
| 7. | M.A.M.Afham | Trincomalee | A | A | A | 2.6411 | 7 |
| 8. | T.Luheerathan | Jaffna | A | A | A | 2.5866 | 8 |
| 9. | Rajenthirakumar Subakaran | Jaffna | A | A | A | 2.5372 | 9 |
| 10. | Sivaraasan Thaarmekan | Jaffna | A | A | A | 2.4651 | 10 |
| 11. | S.Thenusan | Vavuniya | A | A | B | 2.4570 | 11 |
| 12. | Sivapathasundaram Mathurikan | Jaffna | A | A | A | 2.4131 | 12 |
| 13. | Arutshankar Kaneshalingam | Jaffna | B | A | A | 2.4089 | 13 |
| 14. | Lingaratnam Subakaran | Jaffna | A | A | A | 2.4060 | 14 |
| 15. | Thilakaraj Prakanth | Jaffna | A | A | A | 2.3920 | 15 |

### உயிரியற் பிரிவு

| # | Name | District | Biology | Physics | Chemistry | Z-Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Thirumaran Elamaran | Jaffna | A | A | A | 2.6980 | 1 |
| 2. | Hamsha Thananshajan | Jaffna | A | A | A | 2.6359 | 2 |
| 3. | Mahthi Roshan Akthar | Trincomalee | A | A | A | 2.5977 | 3 |
| 4. | Gnanachelvam Kiruthikan | Trincomalee | A | A | A | 2.4866 | 4 |
| 5. | Thanusiya Karunakaran | Jaffna | A | A | A | 2.4054 | 5 |
| 6. | P. Clearein dilujan | Ampara | B | A | A | 2.3911 | 6 |
| 7. | Yalini Kailayapathy | Jaffna | A | A | A | 2.3291 | 7 |
| 8. | T . Mathura | Vavuniya | A | A | A | 2.3260 | 8 |
| 9. | T . Agashan | Jaffna | A | A | A | 2.3108 | 9 |
| 10. | Niluja Mahadevan | Jaffna | A | A | A | 2.3036 | 10 |
| 11. | Srinagashayini Sooriyakumar | Jaffna | A | A | A | 2.1921 | 11 |
| 12. | Suganya Suganthan | Jaffna | B | A | A | 2.1813 | 12 |
| 13. | Yosenthirarajah Shahithiyan | Jaffna | A | A | B | 2.1565 | 13 |
| 14. | Jastiha Ragunathan | Jaffna | A | A | B | 2.1338 | 14 |
| 15. | Pathmanathan Mesigan | Jaffna | A | B | A | 2.1166 | 15 |

### பொறியியற் தொழினுட்பம்

| # | Name | District | BIO.TEC | SCI.TEC | ICT | Z Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Manchika Inparasa | Jaffna | B | B | A | 2.1723 | 1 |
| 2. | Maheer Fathima Minasa | Batticola | B | A | B | 2.0288 | 2 |
| 3. | Ranganathan Agimsha | Jaffna | B | B | B | 1.8302 | 3 |
| 4. | Saraha Kaneshakumaran | Jaffna | A | S | A | 1.6575 | 4 |
| 5 | Balakrishnan Pirashanthi | Jaffna | C | B | B | 1.6350 | 5 |

### உயிர்முறைமைகள் தொழினுட்பம்

| # | Name | District | ENG.TEC | SCI.TEC | ICT | Z Score | Island Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kanakasuntharam Jathursayan | Jaffna | A | A | A | 2.3416 | 1 |
| 2. | Thanabalaratnam Athavan | Jaffna | A | B | B | 1.7349 | 2 |
| 3. | Kirishalini Sellathurai | Jaffna | A | B | B | 1.4497 | 3 |
| 4. | Sanmugaraj Naresh | Jaffna | A | B | C | 1.3828 | 5 |
| 5. | Thayaparan Luxmy | Jaffna | C | A | A | 1.3688 | 6 |

# மிக் விமானக் கொள்வனவு; அறிக்கைகோரும் நீதிமன்று

மிக் தாக்குதல் விமான கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட மூல ஆவணம் காணாமல் போனமை சம்பந்தமாக இலங்கை விமானப்படையின் சட்டப் பணிப்பாளரின் விடயங்களை கேட்டறிந்த கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன, எதிர்வரும் 25ஆம் திகதி இது சம்பந்தமாக விபரமான அறிக்கையை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

வழக்கிற்கு தேவையான முக்கிய ஆவணமான மிக் விமான கொள்வனவு தொடர்பான மூல ஆவணங்களை சட்ட ரீதியாக எவருடைய பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. அவை சரியான முறையில் வைக்கப்பட்டிருந்தமைக் கான பதிவுச் சாட்சியங்கள் இருக்கின்றதா?. விமானப்படையின் எந்த அதிகாரியின் பொறுப்பில் ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஆவணங்கள் காணாமல் போயுள்ளதாக தெரிந்து கொண்ட பின்னர், எடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்த அறிக்கையை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் முன் வைக்குமாறு நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

ஆவணத்தின் பிரதியொன்று, குறித்த சம்பவம் தொடர்பாக கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணைகளின் போது, விமானப்படையின் பொறியியலாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக விமானப்படையின் சட்ட அதிகாரி விங் கொமாண்டரான சட்டத்தரணி திருமதி டயஸ் நீதிமன்றத்தில் அறிவித்தார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜயசுந்தர, பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் ஆகியோர் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தினர். 2006 இல் நான்கு மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சம்பவம் குறித்து சரியான முறையில் விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை கூட இரத்துச் செய்யப்படலாம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் உக்ரைன் அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய மிக் விமான கொள்வனவு தொடர்பில் பல இரகசிய தகவல்கள் விரைவில் வெளியாகும் என கூறப்படுகிறது.

உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் பாவுலோ க்லிம்கினின் அழைப்பின் பேரில் அமைச்சர் மங்கள சமரவீர, உக்ரைனுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தார். அமைச்சருடன் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியும் அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது (இ-10)

# தாரைக்காணாத வீதிகள்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு பழைய வீதியில் உதய தாரகை வீதி கிராமத்தில் பல தசாப்தங்களாக வீதி தார் இடப்படாமல் உள்ளது. எனவே இதனை உரிய அதிகாரிகள் கவனத்திற்கொண்டு இவ் வீதிக்கு தார் இடும் பணிகளை மேற்கொள்ளுமாறு இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம் மக்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கோப்பாய் தெற்கு பழைய வீதியில் உதய தாரகை வீதி என்ற பெயரில் ஒரு கிராமம் அமைந்துள்ளது. இங்கு நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.

பல தசாப்தங்களாக இவ் வீதி தார் என்ற ஒரு வீதிமுறையை கண்டதில்லை.

ஆனால் இக் கிராமத்தைச் சுற்றியுள்ள வீதிகள் அனைத்தும் ஏன் யாழ்.மாவட்டத்தில் அனைத்து சிறிய ஒழுங்கைகளும் திருத்தப்பட்டு திறப்பு விழா அரங்கேற்றத்தையும் கண்டுள்ளது. ஆனால் இக் கிராமத்திற்கு தேர்தல் காலங்களில் வருகின்ற அரசியல்வாதிகளிடம் மனுக்களையும் வீதி அபிவிருத்தி தொடர்பான திணைக்களங்களிடமும் எத்தனையோ கடிதங்களை வழங்கியும் பதில் சாதகமாக இருக்கும். ஆனால் செயல்வடிவில் எதுவும் நடைபெறுவதில்லை என்பது மிகவும் கவலைக்கிடமான சம்பவமாகும். எனவே இவ் வருடத்திலாவது வீதியை புனரமைத்துத் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-5)


## UNIVERSITY OF JAFFNA NOTICE

1.All the academic activities of Vavuniya Campus, Faculty of Medicine, Faculty of Engineering, Faculty of Agriculture and the Unit of Siddha Medicine will commence on 20.07.2016.

2.The examinations of Faculty of Arts and the Ramanathan Academy of Fine Arts will commence on 25.07.2016.

The students are requested to contact the Faculty of Arts for the examination time table.

**Registrar**

(C-5240)

## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் விடுதியினை பராமரிப்பதற்கு இரவு நேர வேலையாள் 35 வயதிற்கு குறைந்த ஆண் தேவை.

சமையல் வேலை ஓரளவு தெரிந்தவராக இருத்தல் வேண்டும்

(5278)

தொடர்பு: 076 554 1472

## யா/ அத்தியார் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்:- 31/07/2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- முற்பகல் 10.00 மணி
இடம்:- கல்லூரி பிரதான மண்டபம்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 2016.07.31 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளமையால் அனைத்து பழைய மாணவர்களும் சமுகம் தந்து பாடசாலை வளர்ச்சிக்கான நல்ல கருத்துக்களை வழங்கி நடப்பாண்டுக்கான நிர்வாகத்தினையும் தெரிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கு.ரவிச்சந்திரன், தலைவர்.
(5276)
ந.ஜெயகிஸ்ணன், செயலாளர்,

## GREEN.VISION.LANKA (PVT)LTD

Project Marketing & Agriculture.
Company Name Approval No:-588908
Address:-A9 Road Karanthai Palai. & Jaffna. Email :- CsClanka@gmail.com
T.P:-0094215688932 Hotline:-0094773275645

## 3ம் தர முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மேற்படி கம்பனியினர் 3 ஆம் தர முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ் விண்ணப்பத்திற்கான அடிப்படை நோக்கமானது, எதிர்வரும் காலங்களில் எமது வியாபார துறைசார் நடவடிக்கையை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் குறுகிய முதலீட்டுடன் உள்ளவர்களை ஒரு வருட காலத்தின் பின் அவர்களுடைய வருமானத்தை அதிகரிக்கச்செய்வதற்கும் இவ் விண்ணப்பம் தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

**Note:** 1) 50 000 ரூபா முதலீடு செய்யும் ஒரு நபருக்கு 12 மாதங்களின் பின் இலாப வியாபார சுழற்சி முறை தொகையாக ஒரு இலட்சம் (100.000) எம்மால் வழங்கப்படும்.

2) இம் முதலீடு செய்யும் நாட்களில் இருந்து முதலீடு செய்யும் நபருக்கு 12 மாதத்திற்கு பின்னரே இச் சலுகை வழங்கப்படும்.

3) இக் கம்பனியினருக்கு தங்களிடம் இருக்கும் வாகனம் (அசையும் சொத்து), அசையாச் சொத்து (விவசாயப் பண்ணைக்குரிய காணி) வழங்க இருக்கும் நபர்களி டம் இருந்தும் 3 ஆம் தர முதலீடு அடிப்படையில் 5 வருட காலங்களுக்கு பெறுவதற்கு எம்மால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச் சொத்துக்களை விற்பனை செய்யப் போவதாயின் எமது கம்பனியினருக்கே விற்பனை செய்யலாம்.

தொடர்புகளுக்கு :-021 492 7605
076 826 8928
077 758 8445

(5244)


# இராசி பலன்

20.07.2016
(ஆடி 05, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பிரதமை பின்னிரவு 4.57 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 5.36 மணிவரை
சுபநேரம் 4.31- 6.01 மணிவரை
இராகுகாலம் 12.01- 1.31மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம்-திருவாதிரை | | சூரி சுக் புத |
| சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்** மனக் குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும்.

**கடகம்** உறவினர்களின் வருகை யுண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், போசன சுகம் உண்டு.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், கௌரவமான நாள்

**கன்னி** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பயணங்களால் பயன் உண்டு.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், செய் தொழில் மேன்மை உண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாய முண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வழி பாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், சுப காரியச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மீனம்** புதிய பொருட் சேர்க்கையுண்டு, நண்பர்கள் வட்டம் விரிவடையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்,காரிய அனுகூலம் உண்டு.

# பல்கலை. மாணவரிடையே இணக்கப்பாடு வேண்டும்

## மாக்சிச -லெனினிசக்கட்சி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அண்மையில் மாணவர்களிடையே இடம்பெற்ற மோதலும் காயமடைந்தமையும் வருத்தத்திற்கும் கண்டனத்திற்குரியதுமாகும். அர்த்தமற்ற இம் மோதல் திட்டமிட்ட உள்நோக்கத்தோடு முன்னெடுக்கப்பட்டதா? அன்றி தற்செயலாக இடம்பெற்றதா? எனக் கண்டறியப்படுவது அவசியமாகும். அத்துடன் இச்சம்பவத்தை தெற்கிலும் வடக்கிலும் ஊதிப் பெருப்பித்து தத்தமது இனவாத அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மிக விரைவாகவே மாணவர்கள் மத்தியில் சுமுக நிலையும் புரிந்துணர்வுடன் கூடிய இணக்கப்பாடும் ஏற்படுத்தப்பட வேண்டும்என்பதை எமது கட்சி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் அறிவுத்துறை விரிவாக்கப் பரப்பிற்குள் புகுந்து கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்கள் நாம் பெரிது, நீங்கள் சிறிது என்றும் அது அங்கே, இது இங்கே என்றவாறு குறுகிய அடையாள மனப்பாங்குடன் மோதலில் ஈடுபட்டுக் காயமடைவது அர்த்தமற்றதும்அநாகரிகமானதுமாகும்.

இன்றைய பொருளாதார நெருக்கடிகளின் தாக்கங்கள் ஒவ்வொரு மாணவர்களையும் பாதித்து வருகின்றன. அதேவேளை கல்விக் கொள்கையின் தவறான முன்னெடுப்புக்களால் பல்கலைக் கழக மாணவர்களும் உயர் கல்வி மாணவர்களும் பாதிப்படைந்து வருகின்றனர். இச் சூழலில் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களும் ஒன்றிணைந்து நின்று குரல் கொடுக்க வேண்டியிருக்க சிறிய சிறிய விடயங்களுக்காக இன உணர்ச்சி வேகத்துடன் தங்களுக்குள் மோதிக் கொள்வது எந்தவகையிலும் நியாயமாகாது என்பது உணரப்படவேண்டும் என்பதையே எமது கட்சி சுட்டிக்காட்டுகிறது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ



செரண்டிப் சிறுவர் இல்லத்தினரால் ஏழாலை தெற்கு தமிழ்ப்பொதுப்பணிமன்ற சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற 4ஆவது அணியின் தையல் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை செரண்டிப் இல்லத்தலைவர் அ.கந்தசாமி தலைமையில் நிலைய முன்றலில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டதுடன் ஏனைய விருந்தினர்களாக முன்னாள் வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் நா.லட்சுமிகாந்தன், சனசமூக நிலையத்தலைவர் சுஜாதரன், ஏழாலை தெற்கு சிலோன் மிஷன் போதகர் மைனசீலன், சூராவத்தை முத்துமாரியம்மன் கோவில் நிர்வாக சபைத்தலைவர் சுயம்புலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் பயிற்சி பெற்ற மாணவியரின் கைப்பணிப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன் மாணவியருக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் மாணவியர், பொதுமக்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.(படங்கள்:-கிஷோர்)

## யாழில் மக்கள்களரியின் புதிய நாடகத் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள்களரி 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆம் திகதியன்று அது தனது 13 ஆவது வருட பூர்த்தியை எட்டுகிறது. இதன் நிமித்தம் ஒரு புதிய செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு அது உத்தேசித்துள்ளது. அந்தவகையில் ஐக்கிய நாடுகளில் கல்வி, தொழில்நுட்ப மற்றும் கலாசார அமைப்பினது கலாசார மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியத்தின் (International Fund for Promotion of Culture of UNESCO செயற்றிட்டத்திற்கிணங்க யாழ்ப்பாண பிரதேசத்தைச் சேர்ந்த இளம் ஆற்றுகையாளர்களை பயிற்றுவித்து மக்கள்களரி உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு நாடகத்தை உருவாக்குவர். அந்நாடகம் நாட்டின் பல இடங்களில் அரங்கேற்றப்படும்.

இச் செயற்றிட்டத்திற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கையின் தலைசிறந்த நாடகவியலாளரான கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், மொழிபெயர்த்த பர்டோல் பிறெக்ட்டின் "கோக்கேசிய சோக் சர்கள்" என்ற நாடகத்தின் தமிழ் வடிவமான "வெண்கட்டி வட்டம்" என்ற பிரதியினை தெரிவு செய்து அதனை தலைசிறந்த நாடகவியலாளரான பராக்கிரம நிரியெல்ல மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் கதிரேசு இரதிதரன் ஆகியோர் இணைந்து நெறியாள்கை செய்கிறார்கள்.

இந்நாடகம் பயிற்றுவிக்கப்பட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் நாடக அரங்கத்தில் அதன் முதல் அரங்கேற்றம் நடைபெறவிருக்கிறது.

அதன்பின் 25 ஆம் திகதி இரவு 3.00/ 7.00 மணிக்கு கொழும்பு, அழகியற் கற்கைகளுக்கான பல்கலைக்கழகத்திலும் 27 ஆம் திகதி மாத்தறை றுகுணு பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், வவுனியா மத்திய மகா வித்தியாலயம், ஹற்றன் சிறிபாத ஆசிரியர் கலாசாலை, திருகோணமலை விவேகானந்தர் மண்டபம் மற்றும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் கல்வி நிறுவனத்திலும் "வெண்கட்டி வட்டம்" அரங்கேற்றப்படவிருக்கிறது.

கே.சத்தியசீலன், அஜந்தன் சாந்தகுமார், எஸ்.நித்திகா, கே.சாரங்கன் சர்மா, திலினி நிமேசா, எஸ். கோவற்சன், கே.கௌறீசன், சரத்பானகல, செல்வராஜ் லீலாவதி, சுமுது மல்லவராச்சி, என்.பிரபு, எம்.சிவரட்ணம், எஸ்.மகாலிங்கம், எம்.குமரசிவம், இநோக்கா லங்காபுர, தியாகராஜா சிவநேசன், றொனிக்கா சாமலி, அரோசா தரங்கனி, இராசையா லோகானந்தன், வீ.றொபின்சன், எஸ்.தேவ ராஜ், ஆர்.தர்சிக்கா, எஸ்.உமா குலன், எஸ்.விதுசன், டபிள்யூ. சௌமி, மதீரா உதிஷானி, ஆர். சந்தோஷ் ஆகியோர் ஒப்பனை, சிவநேசன் அரங்க விதானிப்பாளர், சுவீனிதா பெரேரா ஆடை வடிவமைப்பு, கே. சத்தியசீலன் பிற்புற காட் சியமைப்பு மற்றும் நாடக உப கரணங்கள், இராசையா லோகாநந்தன் இணை இயக்குநராக இந் நாடகத்தில் பங்காற்றுகிறார். இந்நாடகத்தை மக்கள்களரி கலாசார மன்றம் தயாரிக்கின்றது. (இ


## வில்லுப்பாட்டுப் போட்டியில் வட்டு.இந்து முதலாம் இடம்

தேசிய மட்டத்தில் கொழும்பில் நடைபெற்ற மாகாணங்களுக்கிடையிலான தமிழ் மொழித்தினப்போட்டியில் வட மாகாணத்திற்குட்பட்ட யாழ். வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி வில்லுப் பாட்டு போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளது. கடந்த



16 ஆம் திகதி கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க மகாவித்தியாலயத்தில் மேற்படி போட்டி இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ

## பற்றைகளை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை



(கரணவாய்)

வீதியின் மருங்கில் காணப்படும் பற்றைகள் குறித்து கவனம் செலுத்தி அதை அகற்ற வேண்டும் எனப் பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மந்திகை –உபயகதிர்காமம் வீதியில் புலோலி மெ.மி.த.க.பாடசாலைக்கு பின்புறமாக உள்ள மதிலுக்கு வெளிப்புறத்தே பற்றை சூழ்ந்து காணப்படுகின்றது.

பாடசாலை சந்தியில் இருந்து முன்னர் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் இயங்கிய வாசல் வரையான சுமார் 100 மீற்றர் வரையான வீதியின் மருங்கில் அடர்ந்த இலந்தை மரம் மற்றும் செடிகள் வளர்ந்து காணப்படுகின் றன.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களும் இவ் வீதியினையே பயன் படுத்தி வருகின்றனர்.

வாகனம் ஒன்று வரும் போது துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்களில் வருவோர் பெரும் சிரமம் அடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள வீதிக்கருகாமையில் இருக்கும் பற்றைகளை அகற்றி சுமுகமான போக்குவரத்து செய்வதற்கான ஒழுக்குகளை பருத்தித்துறை பிரதேச சபையினர் மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-60)

# ஏமனில் சோதனைச்சாவடி மீது தற்கொலைப்படைத் தாக்குதல்

## 10 பேர் பலி!

ஏமனில் ஏடன் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள ஹட்ரமவுட் மாகாணத்தில் உள்ள துறைமுக நகரமான முகல்லாவில் வாகன போக்குவரத்தை கண்காணிக்கும் இராணுவ சோதனைச் சாவடிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.



முகல்லா நகரில் உள்ள அல்-புரும் மற்றும் அல்-கபர் நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் மீது நேற்றுக் காலை வெடிகுண்டுகள் கொண்ட கார்களை தீவிரவாதிகள் மோத வைத்ததில் பத்துக்கும் அதிகமானோர் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலுக்கு ஏமனில் இயங்கிவரும் அல்-கொய்தா தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-5)

## 104 புதிய கிரகங்கள் கண்டுபிடிப்பு

சூரிய அமைப்புக்கு வெளியே 104 புதிய கிரகங்களைத் தாங்கள் கண்டறிந்திருப்பதாக சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

இதில் நான்கு கிரகங்கள் பூமியைப் போலவே பாறைகள் மிகுந்த மேற்பரப்பைக் கொண்டிருக்கின்றன.

இந்த நான்கு கிரகங்களும் ஒரே நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றன. அவை சுமார் 400 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கின்றன.

கெப்லர் விண்நோக்கி மூலமும், பூமியிலிருந்து செய்யப்பட்ட கண்காணிப்புகள் மூலமும் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கிரகக்கூட்டங்களில் 21 கிரகங்கள், அவைகளின் சூரியனிலிருந்து வசிக்கக் கூடிய தொலைவில் உள்ள பகுதியில் இருக்கின்றன.

இந்தத் தொலைவில் இருந்தால் தான் கிரகங்களில் உயிர் வாழ அனுமதிக்கக் கூடிய அளவு திரவ நிலையில் தண்ணீர் இருக்கும்.

இந்த கெப்லர் விண்நோக்கி செயலிழந்து விட்டதாக மூன்றாண்டுகளுக்கு முன்னர் கருதப்பட்டது. ஆனால் அதன் நான்கு சக்கரங்களில் இரண்டு இழக்கப்பட்ட நிலையிலும், நாசா விஞ்ஞானிகள் அந்த விண்கலனை இயங்கும் நிலையில் வைத்திருக்கிறார்கள். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:50செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5118 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம<br>கி.பா: 34<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5808 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4725 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 12சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5813 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ பொறியியலாளர் லண்டன் PR<br>எதிர்பார்ப்பு:<br>தொ.இ: B/4530 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா: 14செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc, Phd/கனடா<br>தொ.இ: G/5814 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ அரசதொழில<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4524 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5817 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# தென்சீனக் கடற்பகுதியில் கட்டுமானத்தை நிறுத்தோம்

## அமெரிக்காவிடம் சீனர் திட்டவட்டம்

(ஹொங்கொங்)

தென்சீனக் கடல்பகுதி முழுவதும் தங்களுக்கே சொந்தம்என சீனா உரிமை கொண்டாடி வருகிறது. ஆனால் அதற்கு வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் தங்களுக்கும் அந்த பகுதியில் பங்கு உண்டு என்று சீனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

தற்போது தென்சீனக் கடலில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தீவு ஒன்றில் விமானங்கள் இறங்குவதற்கு வசதியாக ஓடுபாதை ஒன்றை சீனா இரகசியமாக அமைத்து வருவது அம்பலமாகியுள்ளது. செயற்கைக் கோள் படம் ஒன்று இதை அம்பலப்படுத்தியுள்ளது. சீனா சர்ச்சைக்குரிய தென்சீனக் கடலில் தனது இராணுவ பலத்தை அதிகரிக்கும் வகையில் இந்த வேலையைச் செய்து வருகிறது.

இதனிடையே, தென்சீனக் கடலில் சர்ச்சைக்குரிய பகுதியில் சீனாவுக்கு உரிமையில்லை என்று சர்வதேச தீர்ப்பாயம் கடந்த செவ்வாய்க்கிழமை தீர்ப்பு அளித்தது. இதனைத் தொடர்ந்து தீர்ப்புக்கு எதிராக, சீனா கடந்த புதன்கிழமை வெள்ளை அறிக்கை வெளியிட்டது.

இந்நிலையில், தென்சீனக் கடல் பகுதியில் கட்டுமானத்தை நிறுத்த மாட்டோம் என்று அமெரிக்காவிடம் சீனா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இது குறித்து மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படை கமாண்டர் வு செங்லி கூறுகையில்,

நன்சா தீவில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை ஒருபோதும் நிறுத்த மாட்டோம். நன்சா தீவு சீனாவின் உள்ளார்ந்த பகுதி. எங்களுக்கு தேவையான இந்த கட்டுமானம் காரணமுடையது, நீதி, சட்டத்திற்குட்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)

# எதிர்கால முதலீடுகள் குறித்து சீனாவுடன் இலங்கை பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்கால முதலீடுகளை மேற்கொள்ளும் வகையில் சீனாவுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.



இலங்கையின் பிரதிவெளியுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா நேற்று முன்தினம் சீனத்தூதுவர் யி சியான் லியாங் உடன் நடத்திய சந்திப்பின்போது இது தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு நாடுகளின் பொருளாதார இராஜதந்திர உறவுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

இதன்படி சீனா, இலங்கையில் விரைவில் பல்நோக்கு திட்டங்களையும் முதலீடுகளையும் மேற்கொள்ளவுள்ளது என்று ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் எதிர்காலம், நாட்டின் செழிப்புக்கு சமவுரிமைக்கொள்கை, பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையிலேயே சர்வதேச சந்தைவாய்ப்புகளை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் அரிசி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட 65 ஆவது வருட நிறைவு மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்ட 60 ஆவது வருட நிறைவு என்பன 2017ஆம் வருடம் எட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இந்திய அமைச்சர் விரைவில் வருகிறார்

இலங்கையில் இடம்பெற உள்ள மூலதன உச்சி மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினராக இந்தியாவின் கைத்தொழில் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் கே.டீராமா ராவோவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இந்த மூலதன உச்சி மாநாடு இடம்பெறவுள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக தொழிலாளர் சம்மேளனம் ஆகியவற்றின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

மேலும், இந்த மாநாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ள இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை ஒரு திறமைமிக்க மூலதனம் என்ற தொனிப்பொருளில் உரையாற்றவுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

இதன்போது பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தல் போன்ற விடயங்கள் பற்றி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும் என கூறப்பட்டுள்ளது. (இ-10)

# இலங்கையில் வைரஸ் தொற்றால் கண்நோய் ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையில் ஒரு வகை வைரஸ் தொற்றினால் கண்நோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கண் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கண் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருபவர்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

• இந்த வைரஸ் தொற்றினால் கண் சிவப்படைதல், கண்ணீர் அதிகமாக வருவதுடன், சிறியளவிலான வலியும் இருக்கும் என வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் குறித்த கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் நன்றாக சவர்க்காரமிட்டு கைகளை சுத்தப்படுத்தி அல்லது சுத்தமான கைக்குட்டைகளை பயன்படுத்துமாறும் கண்மருத்துவ சிறப்பு வைத்தியர் தர்மா இங்குல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்குமாறும்,குறித்த கண் நோயிலிருந்து விசேடமாக சிறுவர்களை பாதுகாக்குமாறும், கண் நோய் ஏற்பட்டிருக்குமானால் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்க்குமாறும் சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.(இ-10)





ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வருடாந்த வேட்டைத் திருவிழா கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி , 13 ஆம் திருவிழா வான வேட்டைத் திருவிழா ஆலயப் பிரதமக் குருக்கள் கீர்த்தி ஸ்ரீவாசன் தலைமையில் இடம் பெற்றது. இதன் போது அபிஷேகங்கள் இடம் பெற்று பூசைகள் நடை பெற்றன. அடியார்கள் தங்கள் தோசங்களை நீங்குவ தற்கு தமது உடல்களில் கரிகள் பூசி வர்கம் குழை அணிந்து , வேடுவர்கள் போல் நேர்த்திக் கடனில் வருடந்தோறும் ஈடுபட்டு வருகின்றார்கள். அந்த வகை யில் இந்த ஆண்டும் அதிகமான சிறுவர்கள் நேர்த்திக் கடனில் பங்கேற்றமை ஒரு விசேட அம்சமாகும்.

(படங்கள் - மல்லாவிச் செய்தியாளர்)

# ஏவற்காரர்களின் செயற்பாடுகள் நிறுத்தப்படின் யாழ்.பல்கலைக்கழகம் பூங்காவாக மாறும்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு



யாழ். பல்கலைகழகத் தினுள் ஊடுருவும் புலனாய் வாளர்களின் செயற்பாடுகள் முற்றிலும் களையெடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்துக்கு வன்னி நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிவமோகன் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நீண்ட காலமாக புலனாய் வாளர்களின் செயற்பாடுகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைதியின்மையை ஏற்ப டுத்தி வந்தமை உலகறிந்த உண்மை. தமது அடக்குமுறை களை முள்ளிவாய்க்கால் நினைவுதினம், மாவீரர் தினம் என வரும் போதெல் லாம் அரங்கேற்றி வந்தனர்.

தமிழர் இனம் சுய கௌர வத்துடன் வாழும் இனம், அவர்களுக்கென பூர்வீக பிரதேசம் உள்ள இனம். தான் விரும்பியபடி போரில் இறந்த வர்களை நினைவேந்தல் செய்ய உரித்துடைய இனம்.

எமது இனத்தின் உரிமை களை பறித்தெடுத்து பேரின வாத சிந்தனையை பல்கலைக் கழகத்தினுள் புகுத்த முற் பட்ட ஒரு குழுவினராலேயே நடந்து முடிந்த அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.

இது கண்டனத்துக்குரி யது, உடன் இரகசிய திட் டங்களுடன் செயற்படும் அரச படையினரின் அல்லது புலனாய்வாளர்கள் என சொல் லப்படுபவர்களின் செயற் பாடுகள் இடைநிறுத்தப்பட வேண்டும். அதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் அமைதி யான கல்வி உறுதிப்படுத் தப்பட வேண்டும்.

மாணவர்களிடம் எக் காலமும் குரோத உணர்வு கள் தோன்றாது. அவர்கள் பரஸ்பரம் சகோதர இன மாணவர்களிடம் அன்பு செலுத் துபவர்கள், ஆதரவாக பழகு பவர்கள்.

திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்ட ஏவல் கூட்டங்கள்தான் அமைதி யின்மையை ஏற்படுத்தும் குற்றவாளிகள். அரசு மனச் சாட்சியுடன் செயற்பட்டு அநா வசிய அரசு படையினரின் அல்லது அவர்களின் ஏவற் காரர்களின் செயற்பாடுகளை நிறுத்துவார்கள் எனின் யாழ் பல்கலைக்கழகம் பூங்கா வாக மாறும். குற்றவாளிகள் தமிழ்,சிங்கள மாணவர்கள் அல்ல மறைமுக நிகழ்ச்சி நிரல் ஊடுருவல்காரர்களே என்றார். (2)




# முல்லை., கிளிநொச்சி மாவட்டங்களில் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 535 லீற்றர் மதுபானவகைகள் 2015 இல் நுகர்வு

## மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டு

(பரந்தன்)

**முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட் டங்களில் 2015ஆம் ஆண்டில் ஏழு இலட்சத்து 19ஆயிரத்து 535 லீற்றர் மதுபானம் நுகரப்பட்டுள்ளதாக மேற்படி மாவட்டங்களின் மதுவரி நிலைய பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.பி. குணரட்ன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

கடந்த 2015 ஆம் ஆண்டில் முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மட்டும் 7இலட்சத்து 19ஆயிரத்து 535 லீற்றர் மதுபானம் நுகரப்பட்டுள்ளதாக அவர் கூறி யுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து 359 லீற்றரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்து 176 லீற்றரும் நுகரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு மதுபான நிலையமேனும் இல்லை.இங்கு இரண்டு ரெஸ்ட்ரோரண்ட் மட்டுமே காணப்படுகின்றன. இதன்மூலமே இவ்வளவு மதுபானமும் நுகரப் பட்டுள்ளது.

இதில் பியர் வகை மதுபானம் 3இலட்சத்து 90 ஆயிரத்து 17 லீற்றரும் விஸ்கி மற்றும் பிராண்டி வகை மதுபானங்கள் மூவாயிரத்து 950 லீற்றரும் ஏனைய சாராய வகைகள் 50 ஆயிரத்து 392 லீற்றரும் நுகரப்பட்டிருப்ப தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு மதுபான நிலையமும் மூன்று ரெஸ்ட் ரோரண்டுகளும் காணப்படுகின்றன.இதில் பியர்வகை மதுபானம் 2 இலட்சத்து 66 ஆயி ரத்து 394 லீற்றரும் விஸ்கி மற்றும் பிராண்டி வகை மதுபானம் 2 ஆயிரத்து 575 லீற்றரும் ஏனைய சாராய வகைகள் 87 ஆயிரத்து 207 லீற்றரும் நுகரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துளார். (2-312)

# கருத்து பகிர்வுறவாடல் அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்படும்

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவிப்பு

தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்களை தமிழ் அரசியல் வாதிகளினால் நடைமுறைப்படுத்து வதே தடம் மாறுகிறதா தமிழ்த்தேசியம் எனும் தொனிப்பொருளில் மன்னாரில் அண்மையில் நடைபெற்ற கருத்து பகிர்வுற வாடல் நிகழ்வின் நோக்கமாகும் என மன்னார் பொது அமைப்புக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் கடந்த 17 ஆம் திகதி மன்னா ரில் நடைபெற்ற தடம்மாறுகிறதா தமிழ்தேசி யம் கருத்துறவாடல் நிகழ்விற்கு எம்மால் அழைக்கப்பட்டு வருகை தந்து நிறைவு வரை பங்கேற்றிருந்த ஆயர்கள், மதகுருமார் கள், தமிழ்த்தேசியகூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் உட்பட அரசியற் கட்சித் தலைவர்கள், கருத்தாய்வாளர்கள், புத்திஜீவி கள்,ஊடகத்துறையினர் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதுடன் தமிழர் அரசியல் வரலாற்றில் அரசியற் கட்சித்தலைவர்களும் சிந்தனைக்குழாமினரும் ஒருங்கிணைந்த முதலாவது கலந்துரையாடல் மிகவும் ஆக்க பூர்வமாக நடைபெற்றது. கருத்தியலாளர்க ளால் முன்வைக்கப்பட்ட தமிழ்தேசிய நிலையியல் நடைமுறை வாதத்தை தமிழ்த் தலைமைகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

அரசியல் கட்சித்தலைவர்களின் பதி லுரைகள் ஆக்கபூர்வமாக அமையவில்லை என்னும் குறைபாடும் எழுந்தது.

எனவே கருத்தியலாளர்களால் தொடர்ந் தும் அவதானம் செலுத்தப்படுவதுடன் அடுத்த கலந்துரையாடல் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடைபெறும்.அதற்கிடையில் குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# அபராதப்பணம் செலுத்தமுடியாத நிலையிலிருந்த 129 பேர் சமுதாயம் சார் சீர்திருத்தப் பணியில்

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தில் சிறு குற்றங் களில் ஈடுபட்டு அபராதப் பணம் செலுத்த முடியாத நிலையிலிருந்த 129 பேர், சமு தாயம் சார் சீர்திருத்த பணிகளுக்கு உட் படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சமுதாயம்சார் சீர்திருத்தத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுக் களுடன் தொடர்புபட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற கட்டளைக்கு அமை வாக சமுதாயம் சார் சீர்திருத்தப்பணிகளில் இவர்கள் கடந்த ஜனவரி மாதம் முதல் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் கஞ்சா உடைமையில் வைத் திருந்தமை, அனுமதிப்பத்திரமின்றி மது பானம் வைத்திருந்தமை, கசிப்பு காய்ச்சல், விற்பனை செய்தமை, மரம் வெட்டியமை, மதுபோதையில் பொது இடத்தில் ஒழுங் கீனமாக நடந்துகொண்டமை போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களே கைது செய்யப்பட்டிருந்தனர் என அத்தக வல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

***இணுவையூர் சக்திதாசன் எழுதிய தொட்டுவிடும் தூரத்தில் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்கா வில் வவுனியா கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன் தலைமையில் நடைபெற்றபோது.***

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)












வன்னிப்பிராந்தியத்தில் உள்ள விழிப்புலனற்றோர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்கல் , வன்னிவிழிப்புலனற்றோர் சங்கத்தின் தேவைப்பாடுடைய.உறுப்பினர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கல் நிகழ்வு முல்லை.வீதி பரந்தனில் அமைந்துள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது. கிளிநொச்சி , முல்லைத்தீவு ,மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பலரும் இந்த உதவித்திட்டத்தின் ஊடாக பயனடைந்தனர்.பயனாளிகளுக்கு மூக்குக்கண்ணாடி ,உலர் உணவுப் பொருட்கள் வழங்கல் நிகழ்வைத்தொடர்ந்து சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

### கிளிநொச்சி தனியார் கல்வி நிலையங்களில்

# சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டன





(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் உத்தரவிற்கமைய மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. முற்பகல் 10 மணியளவில் கரைச்சி பிரதேச சபைசெயலாளர்எஸ்.கம்சநாதன்தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், பிராந்திய சுகாதார சேவைகள் அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

இதற்கமைய உரிய முறையில் கல்வி நிலைய கட்டடங்களை அமைத்தல், குடிநீர், மலசலகூடங்களை மாணவர் தொகைக்கமைய அமைத்தல், மாலைநேர வகுப்புக்களை 6 மணிக்கு முன்பாக நிறைவுக்கு கொண்டு வருதல், இரவு நேர வகுப்புக்களை தவிர்த்தீல், குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் விசேட வகுப்புக் களை நடத்துவதை தவிர்த்தல் , மாணவர்களின் உடல், உள நலங்களை அறிந்து செயற்படுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் உறுதிப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படாத நிலையிலும், பதிவு செய்யப்படாத நிலையிலும் இயங்கி வரும் நிலையில், நீதிமன்றின் உத்தரவிற்மைய இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில் மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படுவதற்கான பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்து கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாடசாலை இடை விலகல், சிறுவர்கள் போதைப்பொருள் பாவனையில்ஈடுபடுதல்போன்றவற்றை தடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் மன்றமும் மாவட்ட செயலகம் மற்றும் சிறுவர் நன்னடத்தைபிரிவும் இணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை அண்மை காலமாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

## உலருணவு, துவிச்சக்கரவண்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டன



(மல்லாவி)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 17 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்பத்தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியத்தின் கோரிக்கைக்கு அமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பத்து குடும்பங்களுக்கு உடையார்கட்டு தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை வள்ளுவர் புரம் கிராமத்தைச் சேர்ந்த மாணவியின் விண்ணப்பத்துக்கு அமைய துவிச்சக்கர வண்டியொன்றும் பாடசாலை உபகரணங்களுமாக மொத்தம் 53 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (2-15-312)




# இரணைதீவில் மீனவர்கள் தங்கி நின்று மீன்பிடிக்க விரைவில் அனுமதி பெறப்படும்

### நேரில் சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

கிளிநொச்சி, இரணைதீவுப்பகுதியில் அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தங்கி நின்று மீன்பிடிப்பதற்கு விரைவில் அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும் என வடக்கு மாகாண மீன் பிடித்துறை, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இரணைதீவு பகுதி மீனவர்கள் தமது பகுதியில் மீள் குடியேறவும், அப்பகுதி கடலில் மீன்பிடிப்பதற்கும் அனுமதி கோரி வருவது தொடர்பில் வினவியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட இரணைதீவு பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 400 மீனவக் குடும்பங்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் அப்பகுதியில் தம்மை மீள்குடியேறுவதற்கும், தமது கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கும் அனுமதி கோரி வருகின்றனர். இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டிருந்தது. அதனடிப்படையில் குறித்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு அவைத் தலைவர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆளுநர் இது தொடர்பில் பேசியுள்ளார். விரைவில் நானும், வடக்குமாகாண ஆளுநர் மற்றும் அப்பகுதி மீனவர்கள் இரணை தீவுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளதுடன் மீனவர்கள் தங்கி நின்று மீன்பிடிப்பதற்குரிய ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (2-250)

# மருத்துவ சேவைகளின் பயிற்சிக்கான பயிலுநர் ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரல்

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில் வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவைகளின் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு -2016 தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய, மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்,மருந்தாளர்,பௌதீக சிகிச்சையாளர் , தொழில் வழி சிகிச்சையாளர், கதிரியியலாளர், கண்தொழில் நுட்பவியலாளர், பற்சிகிச்சையாளர், பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், செயற்கை அவயவ தொழில் நுட்பவியலாளர், பொது சுகாதார பரிசோதகர், இதயத்துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்க பதிவாளர் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆதலால் , தகுதியுடைய விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இருப்பின் மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்குமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய பல் வைத்திய உத்தியோகத்தர் டாக்டர் எஸ்.பாலகுமார் கேட்டுள்ளார்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்கள மொழி / தமிழ் மொழி, கணிதம் ,விஞ்ஞானம்உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2014, 2015 ஆகிய வருடங்களில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த (உ/த) பரீட்சையில் இரசாயனவியல்/ பௌதீகவியல் திறமைச்சித்தியுடன் , உயிரியல், விவசாயம், இணைந்தகணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இப் பயிற்சிக் காலத்தின் போது பயிலுநர்களுக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், உரிய மாதிரிப் படிவத்தையும் இணைத்து அந்தக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிறைவு காண் மருத்துவ சேவை மற்றும் உதவி மருத்துவ சேவையின் பயிற்சி நெறிக்காக பயிலுநர்களை இணைத்துக் கொள்ளல் - 2016 எனக் குறிப்பிட்டு அதற்குக்கீழ் நீங்கள் கோரும் மாகாணம் மற்றும் மாவட்டம் குறிப்பிட்டு இன்றையதினம் பணிப்பாளர் (நிர்வாகம்) 2 , சுகாதார ,போச ணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு , சுவசிறிபாய இல. 385, வண.பத்தேகம விமலவங்ச தேர மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு கிடைக்கும் படி பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய பல் வைத்திய உத்தியோகத்தர் டாக்டர் எஸ். பாலகுமாருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (2)

## பிரதமர் வெளிநாடு சென்றது கூட ஜனாதிபதிக்குத் தெரியாது-விமல்

### சிறுவர்களைப் பிடித்து பதவியில் அமர்த்துங்கள்

(கொழும்பு)

பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ளதால், நாடு அராஜக நிலைக்கு செல்ல வாய்ப்புள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் கூட்டு எதிர்க்கட்சி நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் இந்த சந்தர்ப்பத்தில் பிரதமரும் இல்லை, சபாநாயகரும் இல்லை.


எமது அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது ஜனாதிபதி அல்லது பிரதமர் கட்டாயம் நாட்டில் இருந்தார்கள். சபாநாயகர் எப்போதும் நாட்டில் இருந்தார்.

தற்போதைய ஆட்சியாளர்களுக்கு நாட்டை நிர்வகிப்பது தொடர்பில் மூளையில் எதுவுமில்லை.


பிரதமர் வெளிநாடு செல்வதை ஜனாதிபதி அறியவில்லை. ஜனாதிபதி வெளிநாடு செல்வது பிரதமருக்கு தெரியாது.



இவர்கள் இருவரும் வெளிநாடு செல்கின்றனர் என்பது சபாநாயகருக்கு தெரியாது.

இறுதியில் மூன்று பேரும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். வீதியில் செல்லும் சிறுவர்களைப் பிடித்தாவது, ஜனாதிபதி பதவியையும் பிரதமர் பதவியையும் ஏற்றுக்கொள்ளுமாறு கூறுங்கள். இல்லையென்றால் நாடு அராஜக நிலைக்கு சென்றுவிடும் என வீரவன்ச தெரிவித்தார். (இ-10)




# ராஜபக்ஷ குடும்பத்துக்கெதிராக மட்டும் 58 விசாரணைகள் இடம்பெறுகின்றன!




**(கொழும்பு)**

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்களான பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ மற்றும் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோரின் நிதி மோசடி மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் சம்பந்தமாக 58 விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.**

இவற்றில் பாரதூரமான குற்றச் செயல்களும் அடங்குவதாக கூறப்படுகிறது. கடந்த ஆட்சியின் போது நடந்த 496 நிதி மோசடி சம்பவங்கள் குறித்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

கொலை உட்பட 15 குற்றச் செயல்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது. விசேட விசாரணைப் பிரிவு பொலிஸார் 6 சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


இதனை தவிர ஜனாதிபதி ஆணைக்குழு, இலஞ்ச ஆணைக்குழு என்பனவும் மேலும் பல சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போதே இந்த தகவல்கள் தெரியவந்துள்ளன.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஆட்சி செய்த குடும்பங்களில் ராஜபக்ஷ குடும்பமே அதிகளவான மோசடி மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை எதிர் நோக்கியவர்களாக காணப்படுகின்றனர் என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## யாழ்.பல்கலை.விவகாரத்தில் அரசு தலையிடவேண்டும்

### முன்னாள் அமைச்சர் டியூ தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான மோதல் சம்பவத்தில் அரசாங்கம் உடனடியாக தலையீடு செய்ய வேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மௌனம் போருக்கான விசக்கிருமிகள் மீளவும் தலைதூக்க இடமளித்துவிடக் கூடாது.

பிரச்சினை இதுவரையில் புரிந்து கொள்ளப்படவில்லை. இந்த விடயம் குறித்து மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

இந்த நிலைமையானது ஓர் தேசியப் பிரச்சினையாகும். இவ்வாறான நிலைமைகளில் அரசாங்கம் விரைந்து செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

எந்தப் பகுதியில் பல்கலைக்கழகம் அமைந்திருந்தாலும் அது தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழே இயங்க வேண்டும்.

இந்நிலையில், புதிய மாணவர்களை வரவேற்கும் கலாசார நிகழ்வு மீது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியது என டியூ.குணசேகர தெரிவித்துள்ளார். (இ-10)

## விரைவில் விஜயதாசவும் சிறை வைக்கப்படலாம்

### விமல் வீரவன்ச கணிப்பு



நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் விரைவில் கைது செய்யப்படலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.


இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ராஜபக்ஷ என்ற பெயரைக் கேட்டால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு பயம்.

இதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது கைது செய்யப்படுகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பிணையில் வந்துள்ளார். எனினும், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜபக்ஷ என்ற பெயரைக் கொண்ட யாராவது சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு நல்ல நித்திரை வரும்.



இந்நிலையில் ராஜபக்ஷ என்ற பெயரைக்கொண்டுள்ள நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் விரைவில் கைது செய்யப்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# பாதயாத்திரை முடிவடையும் இடம் குறித்து இரகசியத்தைப் பேணும் கூட்டு எதிர்க்கட்சி

கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரை எதிர்வரும் 28 ஆம் திகதி கண்டி தலதா மாளிகைக்கு அருகில் இருந்து ஆரம்பமாகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பு, விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கப்படாமை,எட்கா ஒப்பந்தம், அரசியல் பழிவாங்கல்கள், உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தாமை போன்றவற்றிற்கு எதிராகவே இந்த பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொரளையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பாதயாத்திரை கண்டியிலிருந்து ஆரம்பமாகி மாவனெல்ல,நெலும்தெனிய, நிட்டம்புவ,கிரிபத்கொட நகரங்கள் ஊடாக கொழும்பை வந்தடைந்தவுடன், மாபெரும் கூட்டம் ஒன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதே வேளை குறித்த கூட்டம் இடம்பெறும் இடம் தொடர்பில் தகவல்களை வெளியிட கூட்டு எதிர்க்கட்சியினர் மறுத்து விட்டனர். விசேட காரணத்திற்காக அந்த இடத்தை அறிவிக்க மறுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-10)

## இலங்கையில் 2400 வர்த்தக தொகுதிகள்

(கொழும்பு)

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக பன்னாட்டு இந்திய நிறுவனம் ஒன்று இலங்கை அரசிடம் அனு மதி கோரியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனமானது 2400 வர்த்தக நிலையங்களை நாடு பூராகவும் அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

(கொழும்பு)

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காஞ்சலம் குடாக் கிராமத்தில் உள்ள பிள்ளையாரடிச் சந்தியில் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் பலியாகியுள்ளார்.

புலிபாய்ந்தகல் பாடசாலை வீதியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான சிவராசா மகேஸ்வரன் (வயது-58) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இவரது மகனும் இவருமாகச் சேர்ந்து மோட்டார் சைக்கிளில் வயலுக்கு நேற்று முன்தினம் மாலை சென்று கொண்டிருந்தனர். இதன் போது பிள்ளையாரடிச் சந்தியில் நின்ற யானை ஒன்று இவர்களைத் துரத்தியுள்ளது.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே போட்டு விட்டு தந்தையும் மகனும் வெவ்வேறு திசைகளில் தப்பியோட முற்பட்டுள்ளனர்.

இதில், தந்தையை குறித்த யானை துரத்தி தாக்கிவிட்டுச் சென்றுள்ளது.

காயமடைந்த தந்தையை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக இவரது மகன் கொண்டு சென்ற போது அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## எதிர்ப்புக்கள் தொடர்ந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்

### அனைவருக்கும் எச்சரிக்கை

கணக்காய்வாளர் நாயகத்திற்கு எதிரான நிலைப்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமானால் தாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்படும் என்று கணக்காய்வு சேவை அமைப்பு எச்சரித்துள்ளது.

மத்திய வங்கி முறிக்கொள்வனவு தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் பல விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். அதில் நியாயம் இல்லை என்றும் கூறிவருகின்றனர்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா, நிலக்கரி பரிமாற்றம் தொடர்பில் தேவையற்ற கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால், இது கணக்காய்வாளர்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் பிழையான எண்ணங்களை ஏற்படுத்தக்கூடும்.

எனவே தமக்கு எதிரான நிலைப்பாடு தொடருமாகயிருந்தால் தாம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் தீர்மானத்திற்கு தள்ளப்படக்கூடும் என்று கணக்காய்வாளர் அமைப்பின் தலைவர் நயனகுமார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நிதியமைச்சர் உறுதியளித்துள்ளார். அதுவரையில் தாம் காத்திருப்பதாகவும் நயனகுமார தெரிவித்துள்ளார். (இ-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மலைவசம்பு/ வெண்கோட்டம் (Insulin Plant)

**Botanical Name-** Costus Specious
**Family-** Zinigiberaceae
**Engl**-Cane reed
**Sinh:** Thebu

ஈராண்டு வாழக்கூடிய உயரமான செடி வகையைச் சார்ந்தது. தண்டு 2 தொடக்கம் 3 மீற்றர் உயரமானதும் செங்குத்தானதும் ஆகும். இலைகள் தனியிலை சுருண்டு ஏறிய ஒழுங்கில் Spirally arrange 15 தொடக்கம் 30 செ.மீ. நீளமுடையதாகும். நீண்ட இலைகள். இலைகளின் கீழ்ப்பக்கம் பளபளப்பாகக் காணப்படும். சிவப்பு, வெள்ளை நிறப்பூக்களும் தைமாதம் முதல் பங்குனி மாதம் வரையும் பின்பு ஆனி மாதத்திலும் பூக்களை அவதானிக்கலாம். பழங்கள் சிவப்பு நிறமாகவும் கறுப்பு நிற விதைகளைக் கொண்டதாகும்.

பரம்பலும் இனவிருத்தியும்

ஈரலிப்பான நிழலான பிரதேசங்களில் வளரக்கூடியது. விதைகள் தண்டுத் துண்டங்கள் உடன் பறித்த மட்ட நிலத்தண்டு Fresh Rhiyome மூலம் இனவிருத்தி செய்யலாம். மார்கழி மாதத்தில் விதைகளை விதைத்து 2 வருடங்களில் அறுவடை செய்யலாம்.

பொதுவாக கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் அறுவடை செய்யப்படும்.

மருத்துவப் பயன்கள்

✦ இதன் இலை மட்ட நிலத் தண்டுகள் மருத்துவ குணம் மிக்கவை.

✦ இதன் இலைகளில் புளிப்புடன் கூடிய ஒருவித சுவை காணப்படும். இதன் ஒரு இலையை பிடுங்கி நன்கு கழுவிச் சுத்தம் செய்து



வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வர நீரிழிவு நோயாளிக்கு இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

✦ மலைவசம்பின் மட்ட நிலத் தண்டிலிருந்து ஒருவித நறுமண எண்ணெய் Essantial oil பிரித்தெடுக்கப்படுகின்றது. இது கூடுதலாக வாசனைத் திரவியங்களிலும் அழகு சாதனப் பொருட்களிலும் சேர்க்கப்படுகின்றது. இதற்கு கிருமிகளை அழிக்கும் தன்மை உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

✦ மலைவசம்பின் மட்ட நிலத் தண்டில் நார்ப்பொருள் Fibre அதிகம் காணப்படுவதால் இதன்சாறு 30 தொடக்கம் 60 மில்லி அளவு பருக நன்கு மலச்சிக்கல் நீங்கும்.

✦ வசம்பின் சாறும் மலை வசம்பின் மட்ட நிலத்தண்டின் சாறும் சம அளவு கலந்து மாறாத காயங்களுக்கு பூசிவர காயங்கள் ஆறும்.

✦ இதன் மட்ட நிலத்தண்டுகளை சேகரித்து தோல் சீவி சிறுசிறு துண்டுகளாக அரிந்து 250 கிராம் மலைவசம்பிற்கு 400 மில்லி தேன் அளவு எடுக்கவேண்டும். தேனினுள் மேற்படி கீற்றுக்களாக அரிந்த மலைவசம்பை வாயகன்ற சீசாவில் போட்டு மூடி 40 நாட்கள் அப்படியே வைத்திருக்கவேண்டும். பின்னர் ஒரு தேக்கரண்டி அளவு தினமும் காலையில் வெறும் வயிற்றில் எடுத்து குடித்துவர உடலுக்கு நல்ல பலத்தை கொடுப்பதுடன் சிறந்த போசாக்கு உணவாகவும் அமையும்.

✦ குடலிலுள்ள புழுக்களை அழிப்பதில் சிறந்த நிவாரணியாகும். (Anti-Vermin)

✦ மலைவசம்பின் மட்ட நிலத் தண்டு, கோரைக்கிழங்கு, வேப்பம் பட்டை ஆகியவற்றை சம அளவு எடுத்து 4 மடங்கு நீர் விட்டு கால் பங்காக வற்றக் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி காலை மாலை அருந்திவர காமாலை குணமாகும்.

✦ மலைவசம்பின் மட்ட நிலத் தண்டிலிருந்து பிரித்தெடுக்கப்படும் diosgenin எனும் அலக்லொயிட் டிற்கு வேதனையைக் குறைக்கும், இருதயத்தை பலப்படுத்தும், மத்திய நரம்புத் தொகுதியை மந்தப்படுத்தும் செயலாற்றல்கள் உண்டு. அத்துடன் இதில் ஈவரரோன் Coestrogeric activity செயலாற்றலும் உண்டு. பெண் மலட்டுத் தன்மைக்கெதிராக செயலாற்றும் தன்மையும் உண்டு.

✦ சமிபாடின்மை, வயிற்றில் ஏற்படும் கோளாறுகளுக்கு மலைவசம்பு லேகியம் சிறந்தது. வீட்டிலேயே தயாரித்துக்கொள்ளலாம். அரை லீற்றர் மலைவசம்புச்சாறு எடுத்து (மட்ட நிலத்தண்டு) பசும் பாலில் அவித்த 15 கிராம் உள்ளியை நசுக்கி மலைவசம்புச் சாற்றில் போடவும். பின்பு மிளகு, சீரகம், ஓமம், வெந்தயம் ஒவ்வொன்றும் 15 கிராம் அளவு எடுத்து எல்லாவற்றையும் கழுவிக் காயவைத்து இடித்து அரித்து அதிமதுரம் 15 கிராம்,



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஏலம் 15 கிராம் ஆகியவற்றை இடித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும். 300 மில்லி பசும்பாலில் 250 கிராம் சீனி சேர்த்து காய்ச்சிப் பாகுப் பதத்தில் மேற்படி பொடியை தூவிக் கிளறி இறக்கும் சமயம் 150 கிராம் நெய் சேர்த்துக்கொள்ளவும். இதில் ஒன்றரைத் தேக்கரண்டி அளவு தினமும் இருவேளை உட் கொள்ள மேற்படி நோய்கள் தீரும்.

குறிப்பு: இதனை ஒவ்வொருவரும் வீட்டில் வளர்க்கக்கூடிய செடியாகும். அழகுச் செடியாகவும் மூலிகைச் செடியாகவும் காட்சி தரக்கூடியது. மேலும் விஷ ஜந்துக்கள், பாம்பு முதலியன இதன் தனிவாசத்திற்கு வராமல் தடுக்கக்கூடிய மூலிகையுமாகும். நிழலான ஈரலிப்பான பகுதிகளில் நன்கு வளரக்கூடியது.

## துருக்கியில் ஆட்சிக்கவிழ்ப்பு ச

# படைத்தளபதிகள்

# 8 ஆயிரம் பொலிஸ




(அங்ஹாரா)

**துருக்கியில் இராணுவ புரட்சியில் ஈடுபட முயன்றதாக 103 படைத் தளபதிகள் கைது செய்யப்பட்டனர். 8 ஆயிரம் பொலிஸார் அதிரடியாக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.**

**இராணுவப் புரட்சி முயற்சி**

ஐரோப்பிய நாடான துருக்கியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இராணுவத்தினரின் ஒரு பிரிவினர் பொலிஸார் துணையுடன் ஜனாதிபதி எர்டோகன் அரசுக்கு எதிராக திடீர் புரட்சியில் ஈடுபட முயன்றனர்.

வர்த்தக தலைநகரான இஸ்தான்புல்லையும், தலைநகர் அங்ஹாராவையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், இராணுவ டாங்கிகளையும் அவர்கள் பயன்படுத்தினர். இந்த 2 நகரங்களின் பல்வேறு பகுதிகளில் குண்டு வீச்சும் நடந்தது.

**290 பேர் பலி**

எனினும் ஜனாதிபதி எர்டோகன் ஆதரவுக் கட்சியினரும், பொதுமக்களும் இலட்சக்கணக்கில் திரண்டு தெருக்களில் இறங்கி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். இதனால் இராணுவ புரட்சி முயற்சி தோல்வியில் முடிந்தது.

அப்போது, இரு தரப்பிலும் நடந்த சண்டையில் 290 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 164 பேர் பொது மக்கள் ஆவர். 1,400 பேர் படுகாயம் அடைந்தனர்.

படுகாயம் அடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற பொதுமக்களில் மேலும் 25 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 290 ஆக உயர்ந்தது.

**6 ஆயிரம் பேர் சிக்கினர**

இந்த நிலையில் இராணுவ புரட்சியில் ஈடுபட முயன்ற சதிகாரர்களை துருக்கி அரசு கைதுசெய்து வருகிறது. இது வரை இராணுவ வீரர்கள், இராணுவ அதிகாரிகள், நீதிபதிகள், அரசு சட்டத்தரணிகள் என 6 ஆயிரத்துக்கும் அதிகமானோரை விசாரணைக்காக பொலிஸார் பிடித்துச் சென்றனர்.

இராணுவ ஜெனரல் மெஹ்மத் திஸ்லி உட்பட 36 இராணுவ தளபதிகள் கைது செய்யப்பட்டு விசாரணை

அதிரடிப்படை



**துருக்கியின் வர்த்தக ந புல்லில் விமானப்படைத்தளம் பணியில் ஈடுபட்டுள்ள பொ வீரர்கள்.**

# காஷ்மீர் விவகாரம்; வாக்கெடுப்பு இல்லை

## ராஜ்நாத்சிங் மறுப்பு

காஷ்மீர் விவகாரத்தில் பொது வாக்கெடுப்பு நடத்த தேவையில்லை என்று டில்லி மேல்சபையில்இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

**விவாதம்**

டில்லி மேல்சபையில், காஷ்மீர் பிரச்சினை குறித்து நேற்று முன்தினம் விவாதம் நடைபெற்றது. அதன் மீது பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், காஷ்மீரில் பாகிஸ்தான் வன்முறையை தூண்டி வருவதாக குற்றம் சாட்டினர்.

இதற்கு துப்பாக்கி குண்டுகள் மூலம் தீர்வு காண முடியாது என்றும், அரசியல் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய அரசை கேட்டுக்கொண்டனர். இதுதொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுமாறும் வலியுறுத்தினர். காஷ்மீர் பிரச்சினை குறித்து பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

**ராஜ்நாத்சிங்**

இந்த விவாதத்துக்கு பதில் அளித்து மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் பேசியதாவது,

காஷ்மீர் பிரச்சினையில் பொது வாக்கெடுப்பு நடத்த தேவையில்லை. அது வழக்கொழிந்து விட்ட அம்சம். காஷ்மீர் மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதே பிரச்சினைக்கு காரணம். அவர்கள் நமது சொந்த மக்கள். அவர்களை நாம் சரியான பாதைக்கு கொண்டு வருவோம்.

**உண்மையை புரியவைப்போம்**

காஷ்மீரில் நடப்பவை அனைத்துக்கும் பாகிஸ்தானே காரணம். காஷ்மீரில் பயங்கரவாதம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும் கும்பலை அணுகும்போது, எடுத்தவுடனே துப்பாக்கி குண்டு பயன்படுத்தக்கூடாது. முதலில், கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு மற்றும் தண்ணீரை பீய்ச்சி அடிப்பதைத்தான் பயன்படுத்த வேண்டும். சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொளளுமாறு பாதுகாப்பு படைகளுக்கு நானும், பிரதமரும் அறிவுறுத்தியுள்ளோம்.

**பாகிஸ்தான் தலையிடக்கூடாது**

சிறிய குண்டுகள் பயன்படுத்தப்படும் துப்பாக்கியால் சுட்டதால்தான் நிறையபேர் கண்பார்வை இழந்து விட்டதாக கூறப்படுகிறது. இது பற்றி விசாரிக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க கண் வைத்தியர்கள் குழு காஷ்மீருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், எத்தனை பேரை வேண்டுமானாலும், விமானம் மூலம் கூட்டி வந்து சிகிச்சை அளிக்க தயாராக இருக்கிறோம்.

காஷ்மீரில் பத்திரிகைகளுக்கும், இணையத்தளத்துக்கும் தடை விதித்திருக்கக் கூடாது. இதுபற்றி முதலமைச்சர் மெகபூபாவு டன் பேசுவேன். காஷ்மீர் விவகாரத்தில் அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்து செல்லவே விரும்புகிறோம்.

அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் உட்பட எல்லா விதமான உதவிகளையும் காஷ்மீருக்கு வழங்க தயாராக இருக்கிறோம். பாகிஸ்தான், எங்களது உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது. இவ்வாறு ராஜ்நாத் சிங் தெரிவித்தார். (இ-5)

# ஐ.நா.தலைமையகம்

# பிரிவினைவாத குழு

(நியூயோர்க்)

ஐ.நா.தலைமையகம் அருகே காஷ்மீர் பிரிவினைவாத குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

காஷ்மீரில் பயங்கரவாதி பர்கான் வானி சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து கடந்த 9 நாட்களாக அங்கு நடந்த வன்முறை சம்பவங்களில் 41 பேர் உயிரிழந்தனர்.

3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இந்த வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள 10 மாவட்டங்களில் தொடர்ந்து ஊரடங்கு அமுலில் உள்ளது.

மேலும் இந்த மாவட்டங்களில் செல்போன் சேவை மற்றும்இணையத்தளசேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.




இந்தப் பகுதிகளில் பாதுகாப்பு பணிகளுக்காக நேற்று முன்தினம் கூடுதல் படைகளும் அனுப்பி வைக்கப்பட்டன. மாநிலத்தில் தொடர்ந்து

### சதி முயற்சியில் ஈடுபட்டதாக

# ள் 103 பேர் கைது

# ஸார் பணி நீக்கம்

படை களத்தில்



த்தக நகரான இஸ்தான்
டத்தளம் முன்பு பாதுகாப்புப்
ள பொலிஸ் அதிரடிப்படை

வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டனர். இவர்களில் 10 பேர் உடனடியாக சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதற்கிடையே இராணுவ புரட்சியில் ஈடுபட்டு தோல்வி கண்ட இராணுவ அதிகாரிகள், நீதிபதிகளில் ஏராளமானோர் இன்னும் தலைமறைவாக இருப்பதாகவும் இவர்கள் மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கான முயற்சியில் இறங்கலாம் எனவும் எர்டோகன் அரசு கருதுகிறது. இதனால் இஸ்தான்புல் நகரில் பாதுகாப்பை உறுதி செய்ய சுமார் 2 ஆயிரம் சிறப்பு அதிரடிப்படை பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

**103 தளபதிகள் கைது**

4ஆவது நாளாக நேற்று முன்தினம் இராணுவ கிளர்ச்சியின் பின்னணியில் இருப்பவர்களை தேடும் வேட்டைப் பணி தீவிரமாக நடந்தது. நேற்று முன்தினம் காலை இஸ்தான்புல் நகரில் உள்ள இராணுவ பயிற்சி பள்ளியில் சிறப்பு அதிரப்படை பொலிஸார நுழைந்து தீவிர சோதனை நடத்தினர்.

மத்திய துருக்கியில் உள்ள கோன்யா விமானப்படைத் தளத்திலும், இஸ்தான்புல் விமான நிலையத்திலும் இதேபோல் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. அப்போது பாதுகாப்பு படையினருடன் சதியில் ஈடுபட்டவர்கள் தங்களை கைது செய்யவிடாமல் மோதலில் ஈடுபட்டனர். எனினும் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்து அவர்களை கைது செய்தனர்.

இந்த 3 இடங்களிலும் இராணுவ தளபதிகள், கடற்படை தளபதிகள்என மேலும் 67 பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த 2 நாட்களில் மட்டும் இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த 103 தளபதிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**8 ஆயிரம் பொலிஸார் நீக்கம்**

இதற்கிடையே துருக்கியில் இராணுவ புரட்சியில் ஈடுபட முயன்றதாக நாடு



முழுவதும் 8 ஆயிரம் பொலிஸார் அதிரடியாக பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். இவர்கள் தலைநகர் அங்ஹாரா, இஸ்தான்புல் நகரங்களில் புரட்சியில் ஈடுபட முயன்ற இராணுவ வீரர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

துருக்கி அரசு இராணுவ புரட்சி தொடர்பாக ஆயிரக்கணக்கானவர்களை கைது செய்து வருவது குறித்து துருகக்கியை ஐரோப்பிய யூனியன் அமைப்பில் இணைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அதன் ஆணையர் ஜோகன்ஸ் ஹாப் கூறுகையில், "துருக்கி அரசு முன்கூட்டியே பட்டியல் தயாரித்து வைத்து அதன்படி ஏராளமானவர்களை கைது செய்து வருவதுபோல் தெரிகிறது. இது கவலைக்குரிய விடயம்" என்று தெரிவித்தார். (இ-5)

## கம் அருகே காஷ்மீர்
## ழுக்கள் ஆர்ப்பாட்டம்




ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகம் அருகே காஷ்மீர் பிரிவினைவாத குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்திய படைகளுக்கு எதிராக அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். காஷ்மீர் அமெரிக்கன் கவுன்சில் தலைமை தாங்கிய இந்த ஆர்ப்பாட்டம் சுமார் மூன்று மணிநேரம் நடந்தது, இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் கலந்துக் கொண்டனர்.

காஷ்மீரில் இருந்து இந்திய படைகள் வெளியேற வேண்டும், சுய நிர்ணயம் இல்லாமல் ஜனநாயகம் கிடையாது, காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க வேண்டிய நேரம் என்ற வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்த அவர்கள் காஷ்மீர் மற்றும் அதனுடைய மக்களுக்கு சுதந்திரம் என்று கோஷம் எழுப்பியுள்ளனர். (இ-5)

### ஜனாதிபதிக்கு எதிரான

# ராணுவ புரட்சிக்கு உதவிய நீதிபதிகள் 44 பேர் கைது!

## 2745 நீதிபதிகளுக்கு பிடியாணை

துருக்கியில் ஜனாதிபதி தய்யீப் எர்டோகன் தலைமையிலான ஆட்சியை கவிழ்க்க இராணுவ புரட்சி நடத்தப்பட்டது. ஆனால் பொது மக்கள் உதவியுடன் அப்புரட்சி முறியடிக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டை மற்றும் மோதலில் 290 பேர் உயிரிழந்தனர். 1500 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அதை தொடர்ந்து இராணுவ புரட்சிக்கு உதவியவர்கள் மற்றும் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராணுவ புரட்சியில் ஈடுபட்டதாக இதுவரை 8 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புரட்சிக்கு உதவியதாக துருக்கி நீதித் துறையை சேர்ந்த பல்வேறு மூத்த நீதிபதிகள் உட்பட 2745 நீதிபதிகளுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 44 நீதிபதிகள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் இராணுவ புரட்சியில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்ற பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஆபிரிக்காவில் இளம்வயதினர் இறப்பதற்கு எயிட்ஸ் காரணம்

(ஜோஹனஸ்பேர்க்)

ஆபிரிக்காவில் 10 முதல் 19 வயதுக்கு உட்பட்டவர்கள் இறப்பதற்கு எயிட்ஸ் மற்றும் எச்.ஐ.வி தொற்று ஒரு பிரதான காரணமாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளுக்கான நிறுவனத்தின் தலைவர் அந்தோனி லேக் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டிலிருந்து பலியானவர்களின் எண்ணிக்கையானது, இரண்டு மடங்கை விடவும் அதிகரித்துள்ளதாக லேக் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச எயிட்ஸ் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

# இனவாதம் தலைதூக்க இடமளிக்க முடியாது

## துமிந்த நாகமுவ கூறுகிறார்

நாட்டில் மீளவும் இனவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக்க முடியாது என முன்னிலை சோசலிச கடசியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான மோதல் சம்பவம் நாட்டில் மீளவும் இனவாதம் தலைதூக்குவற்கான காரணியாக அமைந்து விடக்கூடாது என அவர் சிங்கள பத்திரிகை யொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை என சிலர் கருத்து வெளியிடுகின்றனர்.

இவ்வாறான கருத்துக்கள் மூலம், ஒரு இனம் மற்றுமொரு இனத்திற்கு அடிமைப்பட்டிருக்க வேண்டுமென்ற நிலைப்பாடே வெளிப்படுகின்றது.

83ம் ஆண்டு ஜுலை மாதம் இடம்பெற்றதனைப் போன்று மீளவும் சிங்களத் தமிழ் கலவரம் இடம் பெற அனுமதிக்கப்பட முடியாது.

சிங்கள அல்லது தமிழ் இனவாதத்தை தூண்ட எவருக்கும் இடமளிக்க முடியாது.

முப்பது ஆண்டுகளாக போர் நீடித்து வந்த நாட்டில் இந்த சம்பவத்தை பயன்படுத்தி மீளவும் முரண்பாடுகளை வளர்க்க இடமளிக்கப்பட முடியாது.

பல்கலைக்கழக மாணவர்களும் அரசியல் கட்சிகளும் இந்தப் பிரச்சினையை இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# 25 மில்லியன் சிறுவர்களுக்கு போசாக்கு குறைபாடு - ஐ.நா

நைஜிரியாவில் முன்னர் போகோ ஹராம் ஆயுததாரிகளின் வசமிருந்த போர்னோ மாநிலத்திலுள்ள சுமார் 25 மில்லியன் சிறுவர்கள் கடுமையான போசாக்கு குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உரிய சிகிச்சைகள் விரைவில் சென்றடையாவிடின் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் உயிரிழப்பார்கள் எனவும் ஐ.நாவின் சிறுவர் நிதியம் எச்சரித்துள்ளது.

போகோ ஹராம் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்கள், குடிநீர், உணவு மற்றும் உரிய சுகாதார வசதிகள் இன்றி இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

போகோ ஹராம் பிடியில் இருந்து தப்பியோடிய மக்கள் பட்டினியால் உயிரிழந்து வருவதாக அந்த நாட்டுத்தகவல்கள் தெரிவிக்கின்றன.


போகோ ஹராம் ஆயுததாரிகள் கடந்த ஏழு ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் கிளர்ச்சி நடவடிக்கையால் 20 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளதுடன், 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (இ-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 110 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 600 | 600 |
| தக்காளி | 180 | 140 | 160 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 100 | 80 | 100 |
| கோவா | 150 | 120 | 160 | 160 | 150 |
| கரட் | 180 | 150 | 240 | 200 | 200 |
| பூசணி | 100 | 140 | 150 | 120 | 180 |
| புடோல் | 120 | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 110 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 700 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 240 | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 100 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | — | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 180 | 120 | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 160 | 40 | 160 | 140 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 150 | 160 | 150 |
| கறிமிளகாய் | 350 | 320 | 300 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 600 | 300 | 400 |
| போஞ்சி | 160 | 130 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 180 | — | 150 | 200 | 200 |
| முள்ளங்கி | 40 | 50 | 80 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 30 | 60 | 60 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கொழும்பு நகரில் விமானப்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் விமானத்தாக்குதல் 232



இந்த விமானப்படை தளத்தில்தான் ரஷ்யாவில் தயாரான மிக் ரக போர் விமானங்களும் இஸ்ரேலின் கபிர் ரக போர் விமானங்களும் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. தமிழர்கள் மீது குண்டுகளை வீசி இந்த விமானங்கள் தான் பயன்படுத்தப்பட்டன. எனவே இந்த விமானங்களைத் தாக்கி அழிக்கும் நோக்கத்தில் குறி வைத்த வான்புலிகள் குண்டுகளை வீசினார்கள்.

### 5பேர் பலி

விமானப்படைத்தளத்தில் விழுந்த குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்தன. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வான்புலிகள் அதிரடியாக நடத்திய இந்தக் குண்டு வீச்சில் சிங்கள விமானப் படைவீரர்கள் 5 பேர் பலியானார்கள். 16 பேர் காயம் அடைந்தனர்.

மேலும் 2 ஹெலிகொப்டர்களும் போர் விமானங்களை நிறுத்தும் பகுதியும் சேதம் அடைந்ததாக விமானப்படையின் செய்தித்தொடர்பாளர் அஜந்தா டி சில்வா தெரிவித்தார்.

### கண்காணிப்பு

தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகளின் போர் விமானங்கள் தங்கள் படைத்தளத்துக்குப் பத்திரமாக திரும்பிச் சென்றன.

நள்ளிரவில் எதிர்பாராத வகையில் ஒரு சில விநாடிகளில் அந்தத் தாக்குதல் நடந்து முடிந்து விட்டதால் கட்டுநாயக்க தளத்தில் இருந்த விமானப்படையினர் திணறினார்கள். விடுதலைப்புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தாமல் இருக்க உடனடியாக அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வான்வழி கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

### விமான நிலையம் மூடப்பட்டது

விமானப்படைத்தளத்தை யொட்டியே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் இருப்பதால் அங்கும் பதற்றம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் குண்டு வீசக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டதால் விமான நிலையம் உடனடியாக மூடப்பட்டது.

அங்கிருந்து புறப்பட வேண்டிய விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. கிளம்புவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்த விமானங்களில் இருந்த பயணிகள் கீழே இறக்கப்பட்டனர். அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

விமான நிலையங்களை நோக்கி செல்லும் சாலைகள் உடனடியாக மூடப்பட்டன. விமான நிலையங்களுக்கு வந்த பயணிகளை நடுவழியில் சாலைகளில் பொலிஸார் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பி வைத்தனர்.

### சென்னைக்குத் திரும்பி விடப்பட்டன

இதேபோல் கொழும்பு நகருக்கு வந்து கொண்டிருந்த விமானங்கள் நடுவழியில் சென்னைக்கு திரும்பிவிடப்பட்டன.

பதற்றம் தணிந்த பின்னர் 3 மணிநேரம் கழித்து அதிகாலையில் கொழும்பு சர்வதேச விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது. அதன் பிறகு அங்கிருந்து விமானங்கள் புறப்பட்டுச் சென்றன. சென்னையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த விமானங்கள் கொழும்பு புறப்பட்டுச் சென்றன.

இந்தத் தாக்குதல் பற்றி விடுதலைப்புலிகளின் செய்தித் தொடர்பாளர் ராசையா இளந்திரையன் கூறியதாவது,

### தாக்குதல் நீடிக்கும்

கொழும்பு நகரில் உள்ள கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தின் விடுதலைப்புலிகளின் 2 போர் விமானங்கள் 25-03-2007 அன்று இரவு 12.45 மணிக்கு குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. விமானப்படைத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மிக் கபிர் ரக போர் விமானங்களை குறி வைத்து குண்டுகள் வீசப்பட்டன.

தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிட்டு விடுதலைப் புலிகளின் 2 போர் விமானங்களும் வன்னியில் உள்ள தளத்துக்கு பத்திரமாக திரும்பி விட்டன. சிங்கள விமானப் படையின் பலத்தை குறிக்கும் நோக்கத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவத்தின் மீது இதுபோன்ற தாக்குதலை மீண்டும் நடத்துவோம்.

இவ்வாறு ராசையா இளந்திரையன் கூறினார்

### கொழும்பு நகரில் பதற்றம்

விமானப்படைத்தளத்தில் குண்டுகள் விழுந்து வெடித்த சத்தம் பல மைல் தூரத்துக்குக் கேட்டதாகவும் நெருப்பு பிழம்பு தெரிந்ததாகவும் அந்தப் பகுதியில் வசிப்பவர்களும் வாகனங்களில் சென்று கொண்டிருந்தவர்களும் தெரிவித்தனர். துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்.

வான் புலிகளின் இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பு நகரில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டது.

### 2ஆவது தாக்குதல்

கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவது இது 2ஆவது தடவை ஆகும். கடந்த 2001ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் திகதி விடுதலைப்புலிகள் தற்கொலைப்படையினர் இந்த விமானப் படைதளத்துக்குள் புகுந்து துப்பாக்கியால் சுட்ட தோடு குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதில் 20 பேர் பலியானார்கள். 12இற்கும் அதிகமான போர் விமானங்கள் நாசமாயின.

மேலும் அருகில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்குள் புகுந்தும் தாக்கினார்கள். இதில் 6 விமானங்கள் பலத்த சேதம் அடைந்தன.



(தொடரும்)

# லசந்தவின் குறிப்புப் புத்தகம் குறித்து பொலிஸார் விசாரணை



(கொழும்பு)

**சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரிடமிருந்த குறிப்புப் புத்தகம் காணாமல் போனமை குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

கொலை குறித்து விசாரணைண் நடத்திய சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரகசிய தகவல்கள் அடங்கிய இந்த விசேட குறிப்புப் புத்தகத்தை காணாமல் போகச் செய்துள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்புப் புத்தகம் காணாமல் போன சம்பவம் குறித்து புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தம்மை கொலை செய்ய முயற்சிக்கும் நபர்கள் மற்றும் தம்மை கொலை செய்ய பின்தொடர்ந்த நபர்கள் பற்றிய முக்கிய விபரங்களை லசந்த இந்த குறிப்புப் புத்தத்தில் பதிவிட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் பற்றிய விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, லசந்தவை கொலை செய்வதாக தொலைபேசி ஊடாக மிரட்டிய நபர்களின் விபரங்களும் இந்த குறிப்புப் புத்தகத்தில் பதிவிடப்பட்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

லசந்த கொலையுண்ட போது இந்த குறிப்புப் புத்தகம் அவரது வாகனத்தில் காணப்பட்டதாகவும் அதனை கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் அப்போது கடமையாற்றிய அதிகாரி ஒருவர் தம் வசம் வைத்திருந்தார்.

பின்னர் இந்த குறிப்புப் புத்தகம் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கைகளுக்குச் சென்று இறுதியில் நாட்டின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக செயற்பட்ட முக்கிய நபர் ஒருவரின் கைகளுக்கு சென்றுள்ளது என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் குறிப்புப் புத்தகத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் அது பற்றிய எந்தவிதமான தகவல்களும் வெளியாகவில்லை.

குறிப்புப் புத்தகம் காணாமல் போன சம்பவம் தொடர்பில் ஏற்கனவே உயர்பொலிஸ் அதிகாரிகள் பலரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த குறிப்புப் புத்தகத்தை கண்டு பிடித்தால் லசந்த கொலை குறித்த முக்கிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-10)

# தமிழ் மக்களிடையே அர்ப்பணிப்பில்லை

## ஜாதிக ஹெல உறுமய விசமம்

(கொழும்பு)

நல்லிணக்கத்திற்கு சிங்கள மக்கள் தேவைக்கு அதிகமாகவே அர்ப்பணிப்பு செய்துள்ள போதிலும் தமிழ் மக்கள் அர்ப்பணிப்பினையோ முன்னுதாரணத்தையோ வழங்கத் தவறியுள்ளனர் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த ஸ்ரீவர்ண சிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இனவாத பயங்கரவாதத்திலிருந்து மீட்ட போதிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை இன்னமும் இனவாத பிடியிலிருந்து மீட்க முடியவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் மிகவும் வருந்தத்தக்க சம்பவமாகும்.

மாணவர் வரவேற்பு நிகழ்வில் கலாசார அம்சங்களை உள்ளடக்கியமையே இந்த மோதல் வெடிக்கக் காரணமாகியுள்ளது.

கலாசார சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ள முடியாத இனவாத, மதவாத சக்திகளே இந்த சம்பவத்தின் பின்னணியில் செயற்பட்டுள்ளன.

சிங்கள சமூகத்தின் கலாசாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாத தரப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் இருக்கின்றது என்பது புலனாகின்றது.

இந்த சம்பவத்தை இனவாத அடிப்படையில் விபரிக்க வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. எனினும் இந்த சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்கள் பற்றி நாம் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

30 ஆண்டு கால போரின் போது சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டனர். யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சிங்கள மாணவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

எனினும் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களின் உரிமைகள் முடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலைமை ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் எழுந்தது கிடையாது.

தமிழ் மாணவர்கள் தங்களது புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகளுக்கு நாம் யாரும் எதிர்ப்பை வெளியிட்டதில்லை.

கை கால்களை உடைத்தோ இரத்தத்தை சிந்த வைத்ததோ கிடையாது. அவ்வாறானால் ஏன் யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டும் இந்த இனவாத குழப்பங்கள் ஏற்படுகின்றன?



பல்வேறு காரணிகளுக்காக பல்கலைக்கழகங்களில் மோதல்கள் ஏற்படுகின்றன. எனினும் யாழ். பல்கலைக்கழகத்தில் கலாசார நிகழ்வு ஒன்றின் அடிப்படையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

தேசிய நல்லிணக்கத்திற்கு சிங்கள மக்கள் வேண்டியளவு அர்ப்பணிப்புக்களை செய்துள்ளனர். எனினும் தமிழ் மக்கள் அந்த அர்ப்பணிப்புக்களையோ முன்னுதாரணங்களையோ வழங்கவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் மீட்கப்படாத வலயமாக மாற்றமடைய இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## மணியடிப்பதில் ஒரு நாகரிகம்

நமக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமாக இருக்கிற மணியை உபத்திரவக் கருவியாக ஆக்கிக் கொள்ளக்கூடாது!

மணியை இதமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு வீட்டை அணுகிக் கதவைத் திறக்கக் கோரும் போது ட்ர்ர்ர்ர் என்று இரு செக்கன் நேரத்துக்கு ஒலியெழுப்பினால் போதுமானது. ட்ர்ர்ர்ர்ர்ர்ர் என்று அடித்துக் கொண்டே இருக்கக் கூடாது. கதவைத் தட்டும் போதும் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காரணம், வீட்டில் இருப்பவர்களுக்கும்– ஏன் அதைக் கேட்க நேரும் மற்றவர்களுக்கும் அந்த ஒலி படு எரிச்சலாக இருக்கும். இப்படி எரிச்சலைத் தரும் சிறு சிறு விடயங்களுக்கு மணி ஒலி முக்கியமானது என்பது மறுப்பதற்கில்லை.

ஒரு முறை சிறிதாக மணியடித்ததும் குறைந்தது இருபது முதல் முப்பது செக்கன்கள் வரை நாம் காத்திருக்க வேண்டும். உடனுக்குடன் கோயில் மணி மாதிரி அடிக்கக் கூடாது. உள்ளே இருப்பவர்கள் குளித்துக் கொண்டிருக்கலாம்; உடை மாற்றிக் கொண்டிருக்கலாம். தீவிரமான விவாதத்தில் இருக்கலாம். உடனே போட்டுவிட்டு ஓடிவர முடியாத ஏதேனும் சில வேலைகளைச் செய்து கொண்டிருக்கலாம். இவற்றையெல்லாம் கொஞ்சம் கூட உணராமல், மணியை அமுக்கியதும் கதவைத் திறக்க வேண்டும் என கம்யூட்டர் பாணியில் எதிர்பார்ப்பது தவறு.

எவண்டாவன். கதவைத் திறப்பதற்குள் என்ன அவசரம் என்று மனதிற்குள் கறுவிக் கொண்டு வீட்டுக்காரர்கள் கதவைத் திறந்தால், நமக்கான வரவேற்பு எப்படியிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மாறாக, முதல் மணிக்குப் பிறகு, இவ்வளவு நேரம் காத்திருக்கும் அந்தப் பொறுமைசாலி யார் என்று சிந்தித்தபடி அவர்கள் கதவைத் திறக்கும் சூழ் நிலை உருவானால் பலமான வரவேற்புக் காத்திருக்கும். போகிற காரியங்களும் சாதகமாகும்.

பிற்பகல் மூன்று மணிக்கு ஒருவர் வீட்டிற்குப் போக வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். பகல் தூக்கம் நடக்கும் அந்த நேரத்தில் மணியடித்தால் , தூங்குகிற குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரும் விழித்துக் கொள்வார்கள். அவர்களுள் சிலர் நம்மை வெளிப்படையாகவும், பலர் உள்ளுக்குள்ளும் சபிப்பார்கள்! இத்தகைய தருணங்களில் கதவை இலேசாகத் தட்டியோ , சார் என்றோ அம்மா என்றோ மெதுவான குரலில் கூப்பிடுவது போதுமானது. இந்த நேரம் என்றில்லை, நேரங்கெட்ட நேரத்தில் ஒருவர் வீட்டிற்குப் போவதோ மணியடிப்பதோ சற்றும் விரும்பத் தகாத செயல்.

மணியை அடிக்கும் போது பரபரப்பாகவோ, பதற்றமாகவோ இடிக்கக் கூடாது. கடல் கொந்தளித்து வீட்டு வாசலருகே வந்துவிட்டது போலவா மணியடிப்பது? கூடாது. என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன்! என்று வீட்டில் இருப்பவர்கள் சொல்லும் படி வைத்துக் கொள்ளக்கூடாது.

நம்முடைய ஒவ்வொரு செயலும் நம் பண்பைக்காட்ட வல்லவை. மணியடிக்கும் முறையிலேயே நாம் பண்பு மிக்கவர்கள் என்பதை மற்றவர்களுக்கு நாம் தாராளமாக உணர்த்தலாம்.

**லேனா தமிழ்வாணன்**

## பலாலியில் இந்தியா கள ஆய்வு செய்வதால்

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விளக்கம்




பலாலி விமான நிலையத்தை பொதுப் பாவனைக்காக பயன்படுத்துவது அல்லது பிராந்திய விமான சேவைகளுக்காக பயன்படுத்துவது தொடர்பில் இந்தியா போன்ற நாடுகளின் ஆலோசனைகளைப்பெற்று இலங்கையின் பிராந்திய விமான சேவைகளை மேற்கொள்வதில் சாதகமான காரணிகளாக அமையும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

இவ்வாறான நகர்வுகளை தேசிய பாதுகாப்பிற்கு எந்த வகையிலும் அச்சுறுத்தல் இல்லாத வகையிலும் பிராந்திய பாதுகாப்பை பலப்படுத்தும் வகையிலுமே அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமானத் தளமாக பயன்படுத்துவது குறித்து கள ஆய்வை இந்தியா மேற்கொள்வதாக ஊடகங்கள் தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் பிராந்திய பாவனைக்காக பயன்படுத்துவது தொடர்பிலும் சிவில் விமான சேவைகள் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.



கடந்த யுத்த காலகட்டத்தில் பலாலி விமான நிலையம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கப்பட்ட நிலையில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இராணுவ பயன்பாட்டிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. சுமார் 1000 மீற்றர் பரப்பில் இருந்த இந்த ஓடுபாதைகளை 2500 மீற்றர்கள் வரையில் விஸ்தரிப்பது தொடர்பிலும் அதன் பிற்பட்ட காலங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இப்போதும் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமே உள்ளன.

அதேபோல்பலாலிவிமான நிலையத்தை பொதுப் பாவனைக்காக பயன்படுத்துவது அல்லது பிராந்திய விமான சேவைகளுக்காக பயன்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இது குறித்து ஆராய இந்தியா உள்ளிட்ட சில நாடுகளின் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

ஏனெனில் இந்தியா போன்ற நாடுகளின் பிராந்திய விமான சேவைகள் மிகவும் பலமானதாக காணப்படுகின்றன.

ஆகவே அவர்களின் ஆலோசனைகளை பெற்று இலங்கையின் பிராந்திய விமான சேவைகளை மேற்கொள்வது சாதகமான காரணிகளாக அமையும்.

விமான சேவைகள் மாத்திரம் அல்ல உள்நாட்டு புகையிரத விஸ்தரிப்பு மற்றும் வடக்கு கிழக்கு வீதி விஸ்தரிப்பு தொடர்பிலும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

எவ்வாறு இருப்பினும் இவ்வாறு இந்தியாவின் மூலமாக விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இலங்கை சிவில் சேவைகள் அதிகார சபையின்கீழேயே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

அதேபோல் இவ்வாறான நகர்வுகள் தேசிய பாதுகாப்பிற்கு எந்த வகையிலும் அச்சுறுத்தல் இல்லாத வகையிலும் பிராந்திய பாதுகாப்பை பலப்படுத்தும் வகையிலுமே அரசாங்கம் மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜியின் 200 ஆவது படம் 'திரிசூலம்'

**சிவாஜியின் விருப்பம்**

பிரபு நடிகரானது பற்றி பிற்காலத்தில் சிவாஜி கணேசன் கூறியதாவது,

பிரபு என் மகன் .அவனைப் பற்றி நானே கூறுவது அவ்வளவு நன்றாக இருக்காது. எனினும், அவன் பெரிய ஸ்போர்ட்ஸ் மான். ஜாவலின் த்ரோ என்ற விளையாட்டில் சம்பியன். ஜாவலின் எறிந்தான் என்றால், கிரவுண்டை விட்டு வெளியே தூக்கி எறிந்து விடுவான்.

மிக வேகமாக ஓடுவான். டிராக்கில் ஓடினான் என்றால், ஒரு வெள்ளைக் குதிரை ஸ்லோமோஷனில் ஓடி வருவது போல இருக்கும்.

அவனை மிகச் சிறப்பாக படிக்க வைத்து, ஒரு நல்ல பொலிஸ் ஆபீசராக உருவாக்க வேண்டும் என்று நினைத்தேன். என் ஆசை நிறைவேறவில்லை.

**வில்லன் வேடம்**

எனக்குத் தெரியாமலேயே என் தம்பி சண்முகமும் டைரக்ட் சி.வி.ராஜேந்திரனும் திடீரென்று ஒருநாள் வந்து இந்தப் புதுமுக நடிகனைப் பாருங்கள் என்று கூறி பிரபுவை என் பக்கத்தில் நிறுத்தி விட்டார்கள் அதுவும் எனக்கு வில்லனாக! அந்தப்படம் தான் சங்கிலி.

அதிலிருந்து ஒரு சில திரைப்படங்களில் என்னுடன் நடித்திருக்கிறான்.உதாரணமாக சந்திப்பு, மிருதங்கச் சக்கரவர்த்தி, வெள்ளைரோஜா போன்ற படங்கள்.



சங்கிலி படத்தில் சிவாஜியும் பிரபுவும்

அவன் நல்ல திறமைசாலி. அவனுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அவன் என்னைப் போல நடிக்கமாட்டான். தெரிந்தோ தெரியாமலோ மக்கள் அப்பா மாதிரியே நடிக்கிறான், நடக்கிறான் என்று கூறுகிறார்கள். அது அவனுடைய தவறில்லை. அவன் என்னுடைய மகன் என்ற எண்ணத்தில் மக்கள் பார்க்கும் போது அது போல் தோன்றுகிறது அவ்வளவு தான். இவ்வாறு சிவாஜி குறிப்பிட்டுள்ளார்.

**ரஜனிகாந்த் இணைந்து நடித்த படம்**

சிவாஜிகணேசனும் ரஜனிகாந்தும் முதன்முதலாக இணைந்து நடித்த படம் ஜஸ்டிஸ் கோபிநாத். வள்ளி மணாளன் பிக்சர்ஸ் தயாரித்த படம் இது. வசனத்தை வியட்நாம்வீடு சுந்தரம் எழுத யோகானந்தம் டைரக்ட் செய்தார்.

ரஜனிகாந்த் முன்னுக்கு வந்து கொண்டிருந்த காலகட்டத்தில் (1978) இப் படம் வெளிவந்தது. இதில் கே.ஆர். விஜயாவும் நடித்தார்.

சிவாஜியும் ரஜனியும் இணைந்து நடித்த அடுத்த படம் நான் வாழவைப்பேன். கே.ஆர்.விஜயாவின் சொந்தப் படமான இது 18.08.1979 இல் வெளிவந்தது.

இடைவேளைக்கு பிறகு தான் ரஜனி வருவார். நல்ல குணச்சித்திர பாத்திரம். குண்டடிபட்டு அனு அனுவாக செத்துக்கொண்டிருந்த போதும் வில்லனுடன்(மேஜர் சுந்தரராஜன்) போராடி சிவாஜியைக் காப்பாற்றுவார். ரஜனி காந்த் சுப்பர் ஸ்ராராக உருவதற்கு வழி வகுத்த படம் இது.

இந்தப்படத்திற்கு வசனம் எழுதியவர் ஆரூர்தாஸ். இசை. இளையராஜா. டைரக்சன் யோகானந்த்.

1980 இல் ரிஷிமூலம், தர்மாராஜா, எமனுக்கு எமன், இரத்த பாசம், விஸ்வரூபம் ஆகிய படங்களிலும் 1981 இல் மோகனப் புன்னகை, சத்தியசுந்தரம், அமரகாவியம், கல்தூண், லொறி டைரவர் ராஜா கண்ணு, மாடி வீட்டு ஏழை, கீழ்வானம் சிவக்கும் ஆகிய படங்களிலும் சிவாஜி நடித்தார்.

**சிவாஜியுடன் சரிதா**

1981 ஒக்டோபர் 21 ஆம் திகதி வெளிவந்த கீழ்வானம் சிவக்கும் படத்தில் சிவாஜி கணேசனுடன் சரிதா நடித்தார். இருவரும் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தினர்.

100 நாட்கள் ஓடிய இந்த வெற்றிப்படத்தை முக்தா சீனிவாசன் இயக்கினார். வசனத்தை விசு எழுத இசை அமைத்தவர் எம்.எஸ். விஸ்வநாதன். எம்.கர்ணனின் ஒளிப்பதிவு சிறப்பாக இருந்தது. (தொடரும்)

# போர்க்குற்றத்தில் ஈடுபட்ட மூவருக்கு மரண தண்டனை

## மேலும் 5 பேருக்கு வாழ்நாள் சிறை

(டாக்கா)

**போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில் மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 5 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

பங்களாதேஷத்தில் கடந்த 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற விடுதலைப்போரின் போது ஏராளமான மனித உரிமை மீறல்கள் நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக பங்களாதேஷத்தின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் விசாரணை நடத்தி வருகிறது.

இந்த போர்க்குற்ற செயலில் ஈடுபட்ட 4 பேருக்கு இதுவரை அங்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், மேலும் 8 பேர் மீதான விசாரணை டாக்காவில் உள்ள தீர்ப்பாயத்தில் நடந்து வந்தது. இவர்கள் மீது கூட்டுப் படுகொலை, கடத்தல், சித்திரவதை, கொள்ளை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு இருந்தன. இவர்கள் மீதான வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன்படி குற்றவாளிகள் 3 பேருக்கு மரண தண்டனையும், மீதமுள்ள 5 பேருக்கு வாழ்நாள் சிறைத் தண்டனையும் விதித்து நீதிபதி அன்வருல் ஹக் உத்தர விட்டார்.

இந்த விசாரணையின் போது குற்றவாளிகள் 2 பேர் நேரில் ஆஜராகியிருந்தனர். மீதமுள்ள 6 பேரும் தலைமறைவாகி விட்டனர். இந்த தீர்ப்பு நாடு முழுவதும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# இந்திய-இலங்கை ஆயுதப்படைகளுக்கு இடையிலான இரண்டாவது மூலோபாயக் கலந்துரையாடல் நிறைவு

(கொழும்பு)

இந்திய- இலங்கை ஆயுதப் படைகளுக்கு இடையிலான இரண்டாவது மூலோபாயக்கலந்துரையாடல் நேற்று முடிவுக்கு வந்துள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

நிபுணத்துவம் மற்றும் பரஸ்பரம் நன்மையளிக்கும் உறவுகளை இரண்டு நாட்டு ஆயுதப்படைகளுக்கு இடையில் ஊக்குவிக்கவும், இந்திய- இலங்கை ஆயுதப்படைகளுக்கு இடையிலான மூலோபாயக் கலந்துரையாடல் 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் இரண்டாவது கலந்துரையாடல் இலங்கையின் கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல், ஆயுதப்படைகளுக்கு இடையில் நேரடியாகவும் பரஸ்பரம் நலன்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் பற்றிய தரவுகளை பரிமாறிக் கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தியப் பெருங்கடலில், இலங்கையின் மூலோபாயக் கரிசனைகள், ஆசிய பசுபிக் பிராந்தியம் புவிசார் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மாறி வரும் சூழல், தேசிய பாதுகாப்புக்கும் பூகோள பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உருவெடுத்து வரும், தீவிரவாதம், அடிப்படைவாதம் என்பனவும் இந்த ஆண்டு கலந்துரையாடலில் முக்கிய அம்சமாக இருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியக் குழுவுக்கு எயர்மார்ஷல் ஏ.எஸ். பொன்ஸ்லே தலைமை தாங்கினார்.



அவருடன், எஸ்.எல். ஜோஷி, கப்டன் பிரகாஸ் கோபாலன், விங் கொமாண்டர் ஏ.ஏ.கெல்கர் ஆகியோரும் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

இலங்கை குழுவுக்கு, கூட்டுப்படைகளின் தளபதி எயர்சீவ் மார்ஷல் கோலித குணதிலக தலைமை தாங்கினார்.

அவருடன், மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ், றியர் அட்மிரல் ரணசிங்க, எயர் வைஸ் மார்ஷல் குருசிங்க, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் மென்டிஸ், றியர் அட்மிரல் ஏ.எஸ். விமலதுங்க மற்றும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் பங்கேற்றனர். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 784

Search for people, places and things

Nagendram Home

### தர்சினி




### விதுசன்



### சிந்து




### வின்ஜக்சன்




### விமலேந்திரன்

மனைவி:-வேலைக்காரனுக்கு உங்க சட்டையை ஏன் கொடுத்தீங்க?

கணவன்:-ஏன் என்னாச்சு?

மனைவி:-நீங்கதான்னு நினைச்சு...

கணவன்:-நினைச்சு!

மனைவி:-பின்னாடியே போய்

கணவன்:-போய்!

மனைவி:-பூரிக்கட்டையால் தலையில் அடிச்சிட்டேன்

### தர்மா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# இது தான் ஜெயிக்கும்

அந்த அழகிய வனத்தில் இருந்த குளத்தில் தவளைகள் அதிகம் வாழ்ந்து வந்தன. எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மகிழ்வுடன் இருந்தன.

ஒருநாள் குளக்கரையில் சத்தம் கேட்டு, தவளைகள் பார்த்தன. குளக்கரையில் இரண்டு காளை மாடுகள் ஒன்றை ஒன்று முட்டி சண்டை போட்டுக் கொண்டு இருந்தன. நேரம் செல்லச் செல்ல அவற்றின் சண்டையும் சூடு பிடித்தது. தவளைகள் ஒன்றுக் கொன்று பந்தயம் கட்ட ஆரம்பித்து விட்டன.

வெள்ளை மாடுதான் சண்டையில் வெற்றி பெறும்!" என்றது ஒரு குழுத்தவளைகள்.


"இல்லை, இல்லை செவலை மாடுதான் வெற்றி பெறும்!" என ஒரு குழுவும் தவளைகளுக்குள் பந்தயம் கட்டிக் கொண்டு, ஆர்வத்துடன் மெய் மறந்து மாட்டுச் சண்டையைக் கவனித்தன.

அப்போது அங்கு வந்த கிழத் தவளை, "இந்த மாட்டுச் சண்டையில் எது வெற்றி பெற்றால்என்ன, தோற்றால் என்ன? சண்டையை வேடிக்கை பார்த்து உங்கள் வாழ்க்கையை இழந்துவிடாதீர்கள்!" என்றது.

"என்ன தாத்தா! நம்ம கூட்டமே கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காங்க, நீங்க என்ன்டான்னா இப்படிப் பேசுறீங்களே!"

"ஆமாப்பா இந்த சண்டையால் நம் இனம்தான் பாதிக்கப்படும் வாருங்கள் குளத்தை விட்டு வெளியேறுவோம்!" என்றது.

"இந்த கிழத்துக்கு வேறு வேலையே இலலை. தானும் வாழ்க்கையை அனுபவிக்காது இளசுகளையும் அனுபவிக்க விடாது!"



"இந்த மாடுகளில் ஏதாவது ஒன்று வெற்றி பெற்றாலும், தோற்ற மாடு இந்தக் குளத்துக்குள் வெறித்தனமா அங்குமிங்கும் ஓடுமே! மாடு குளத்துக்குள் ஓடும் போது நம் தவளைச் சகோதரர்கள் எத்தனை பேர் அதன் காலில மிதிப்பட்டு இறந்து விடுவர்என யோசிததாயா?" என்று கூறி கவலைப்பட்டது.

"ஆமாம் தாத்தா! நீங்கள் கூறுவதும் உண்மைதான்!" என உணர்ந்த சில தவளைகள் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கியது. அவைகளின் பேச்சில் உண்மை இருப்பதை உணர்ந்த சில தவளைகள் அவற்றின் பின்னால் சென்றன.

சிறிது நேரத்தில் அவை குளத்தை விட்டு வெளியேறி தப்பிவிட்டன. அவைகளின் பேச்சைக் கேட்காமல் இளம் தவளைகள் மட்டும் குளத்திலேயே இருந்தன.

சிறிது நேரத்தில் வெற்றி பெற்ற மாடு, தோல்வியுற்ற மாட்டினை முட்டித் தள்ளியது. இதனால், அந்த மாடு குளத்துக்குள் இறங்கி அங்குமிங்கும் ஓடியது. இப்போது அதன் கால்களில் மிதிபட்டு எத்தனையோ தவளைகள் இறந்துவிட்டன. "அப்போதே குளத்திலிருந்து தப்பிச் சென்றிருக்கலாமே. கிழத்தவளையின பேச்சைக் கேட்காமல் இப்படி அநியாயமா சாகிறோமே என புலம்பயவாறே உயிரை விட்டன.

(முற்றும்)

## 07.2016 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1618 - புளுட்டோ பூமிக்கு மிக அண்மைக்கு வந்தது. இதன் அடுத்த நிகழ்வு 1866 இல் நிகழ்ந்தது. மீண்டும் இது 2113 இல் நிகழும்.
- 1656 - பத்தாம் சார்ல்ஸ் குஸ்டாவ் மன்னனின் சுவீடனின் படைகள் வாரசாவில் இடம்பெற்ற போரில் போலந்து-லித்துவேனியப் படைகளை வென்றனர்.
- 1871 - பிரித்தானியக் கொலம்பியா கனடாவுடன் இணைந்தது.
- 1917 - முதலாம் உலகப் போர்: யூகொஸ்லாவிய இராச்சியம் உருவாக்கப்பட்டது.
- 1922 - பன்னாட்டு அமைப்பு ஆபிரிக்காவில் டோகோலாந்து பிரான்சுக்கும், தங்கனீக்கா ஐக்கிய இராச்சியத்துக்கும் வழங்கியது.
- 1924 - அமெரிக்க உதவி தூதுவர் "ரொபேர்ட் இம்ரி" சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து ஈரானின் தெஹ்ரான் நகரில் இராணுவச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- 1935 - இந்தியாவில் லாகூரில் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் பலர் கொல்லப்பட்டனர்.
- 1940 - டென்மார்க் பன்னாட்டு அமைப்பில் இருந்து விலகியது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய இராணுவத் தளபதி ஒருவனால் ஹிட்லர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் இருந்து அவர் தப்பித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாம் தீவை அடைந்தன.
- 1947 - பர்மியப் பிரதமர் ஓங் சான் மற்றும் 7 அமைச்சர்கள் கொலை தொடர்பாக முன்னாள் பிரதமர் ஊசோ கைது செய்யப்பட்டார்.
- 1948 - அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 12 தலைவர்கள் நியூயோர்க் நகரில் கைது செய்யப்பட்டனர்.
- 1949 - 19-மாத அரபு - இஸ்ரேல் போரின் பின்னர் இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டனர்.
- 1951 - ஜோர்தானின் மன்னர் முதலாம் அப்துல்லா ஜெருசலேமில் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1953 - யூனிசெப் அமைப்பை நிரந்தரமாக்கும் முடிவு ஐ.நா.வில் எட்டப்பட்டது.
- 1954 - வியட்நாமை இரண்டாகாப் பிரிக்கும் உடன்பாடு ஜெனீவாவில் எட்டப்பட்டது.
- 1960 -இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவானார். இவரே நாடொன்றின் தலைவராகத் தெரிவான முதற் பெண் ஆவார்.
- 1962 - கொலம்பியாவில் நிலநடுக்கத்தில் 40 பேர் கொல்லப்பட்டனர்.
- 1964 - வியட்நாம் போர்: வியட் கொங் படைகள் "காய் பே" நகரைத்தாக்கி 11 தென் வியட்நாமியப் படையினரையும் 30 குடிமக்களையும் கொன்றனர்.
- 1969 - அப்பல்லோ 11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்றோங், எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்தனர்.
- 1974 - சைப்பிரசில் அதிபர் மூன்றாம் மக்காரியோசுக்கு எதிராக இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து துருக்கியப் படைகள் அங்கு முற்றுகையிட்டன.
- 1976 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தாய்லாந்தில் இருந்து முற்றாக வெளியேறினர்.
- 1976 - வைக்கிங் 1 சந்திரனில் இறங்கியது.
- 1979 - இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1980 - இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் நகரை ஐ.நா. உறுப்பு நாடுகள் அங்கீகரிக்க முடியாதவாறு ஐ.நா. பாதுகாப்பு அவை 14-0 என்ற வாக்குகளால் தடையுத்தரவைப் பிறப்பித்தது.
- 1982 - ஐரியக் குடியரசு இராணுவத்தினரினால் லண்டனில் நடத்தப்பட்ட இரு குண்டு வெடிப்புகளில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 47 பொதுமக்கள் படுகாயமடைந்தனர.
- 1996 - ஸ்பெயினில் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள

- கிமு 356 - மகா அலெக்சாந்தர், கிரேக்க மன்னன். (இ. கிமு 323)
- 1822 - கிரிகோர் ஜோஹன் மெண்டல், ஆஸ்திரிய மரபியல் அறிவியலாளர். (இ. 1884)
- 1919 - சேர் எட்மண்ட் ஹில்லறி, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மனிதர், நியூசிலாந்தின் மலையேறி.
- 1923 - மு. சிவசிதம்பரம், ஈழத் தமிழ் அரசியல்வாதி. (இ. 2002)
- 1929 - ராஜேந்திர குமார், இந்திய நடிகர்.(இ. 1999)
- 1975 - ரே ஏலன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள

- 1937 - மார்க்கோனி, வானொலியைக் கண்டுபிடித்தவர். (பி. 1874)
- 1973 - புரூஸ் லீ, தற்காப்புக்கலை வல்லுநர், ஹாலிவுட் நடிகர். (பி. 1940)

### சிறப்பு நாள்

- அனைத்துலக சதுரங்க நாள்.
- கொலம்பியா - விடுதலை நாள். (1810)
- வடகடு சைப்ரஸ்-அமைதிமற்றும் விடுதலைநாள்.

# கிரிகோர் ஜோஹன் மெண்டல்



ஆஸதிரியப் பேரரசில் உள்ள ஐன்செண்டோர்ஃபு என்ற இடத்தில் பிறந்தார். மெண்டல், தன் இளவயதில் தோட்ட வேலை பார்த்தார். பின் ஓல்முட்டுசு மெய்யியல் நிறுவனத்தில் சேர்ந்து பயின்றார். 1843ல் பெறனோவில் உள்ள அகத்தீனிய மடத்தில் சேர்ந்தார். அதன் பிறகு வியன்னா பல்கலைககழகத்தில் கல்வி பயிலச் சென்றார்.தாவரங்களில் இருந்த வேறுபாடுகளை ஆய்வு செய்வதற்கு, அவரது பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மடத்தில் உடன் பணியாற்றியவர்களும் தூண்டுகோலாக விளங்கினர். மெண்டலுக்கு இயற்கை மீதிருந்த காதலே அவருடைய ஆராய்ச்சி மனப்பான்மைக்கு முக்கியக் காரணமாகும். தாவரங்கள் தவிர, வானியலிலும் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகளிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. . 1856இல் இருந்து 1863 வரை பல நுணுக்கமான வேறுபாடுகளைக் கொண்ட பட்டாணிச் செடிகளை வளர்த்து, அவற்றின் மரபுப் பண்புகளை ஆராய்ந்தார். இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக, பாரம்பரிய இயல்புகள் சந்ததியூடாக கடத்தப்படும் செயல முறையை விளக்க, இரு முக்கிய விதிகளை முன்மொழிந்தார். அவர் இனங்கண்டு எடுத்துரைத்த சில புதிய தாவர இனங்களுக்குரிய சீர்தர தாவரவியல் ஆசிரிய குறுக்கங்களில் மெண்டல்" எனக் குறிப்பிடப்படுகின்றது. எணவே, தனது அறிவியல் நோக்கிலான வேலைகளை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டு, நிருவாகக் கடமைகளை செய்யத் தொடங்கினார்.ஜனவரி 6, 1884ஆம் ஆண்டு ஆஸதிரியா-அங்கேரில் உள்ள பெறனோ ஏன்ற இடத்தில் நீடித்த கல்லீரல் அழற்சி நோயால் உயிரிழந்தார்.

## அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சி

# எரிபொருள் விலையை உயர்த்துவதில் கவனம்

அரசாங்கத்தின் வருமான வீழ்ச்சியை ஈடுகட்டும் வகையில் எரிபொருள் விலையை அதிகரிப்பதில் அரசின் முக்கியஸ்தர்கள் கவனம் செலுத்தி வருவதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும், அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான நிவாரண சேவைகளை மேற்கொள்வதற்கும் தேவையான நிதியைத் திரட்டிக் கொள்ளும் வகையில் அரசாங்கம் வற்வரியை அதிகரித்திருந்தது.

எனினும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு காரணமாக வற்வரி அதிகரிப்பிற்கு தற்போது இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தின் வருமானம் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

வற் வரியை நாடாளுமன்ற சட்டமூலம் ஒன்றின் மூலமாக அதிகரித்துக் கொள்வதிலும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் இடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வற்வரிக்குப் பதில் எரிபொருளின் விலையை அதிகரித்து அரசாங்கத்தின் வருவாய் இழப்பை ஈடுகட்டுவது தொடர்பில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

எனினும் உலக சந்தையில் எரிபொருளின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் உள்நாட்டில் எரி பொருள் விலையை அதிகரிப்பது பெரும் எதிர்ப்பலைகளை உருவாக்கிவிடக் கூடும் என்ற அச்சம் காரணமாக இது தொடர்பில் எதுவித இறுதி முடிவுகளும் எடுக்கப்படாத இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (இ-10)

## பிரபல பாடசாலைகளுக்கு முற்றுப்புள்ளி

# தொழில்வல்லுநர்களை உருவாக்கும் பாடசாலைகளை ஸ்தாபிக்க வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தொழில் வல்லுநர்களை உருவாக்கும் சிறந்த பாடசாலைகளை ஸ்தாபிக்க வேண்டும் என பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரபல பாடசாலை முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

புளத்சிங்கள ஏகல்ஓய, வாராந்த சந்தை மற்றும் பொருளாதார நிலையத்தை நிர்மாணிப்பதற்கான கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தனியார் மருத்துவ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அரச பல்லைக்கழகத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை போன்ற நம்பிக்கையை பெற அந்த நிறுவனம்தவறியுள்ளது.

மேலும் தனியார் பாடசாலைகளில் தேசிய பாடநெறிகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (இ-10)

# வெனிசுவெலா-கொலம்பியா எல்லை உணவுக்காக திறப்பு

## ஒரு இலட்சம் பேர் நுழைவு

வெனிசுவெலா மக்கள் அடிப்படை உணவு மற்றும் மருந்து பொருட்களை வாங்குவதற்காக அந்நாட்டின் கொலம்பிய எல்லை இந்த மாதத்தில் இரண்டாவது முறையாகவும் திறந்துவிடப்பட்டுள்ளது.



எல்லை தாண்டிய குற்றச்செயல்களை தடுப்பதற்காக ஜனாதிபதி நிகொலஸ் மடுரோவினால் ஓர் ஆண்டாக மூடப்பட்ட கொலம்பிய எல்லை கடந்த வாரம் முதல் முறை திறக்கப்பட்டபோது 35 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் எல்லை கடந்து சென்றனர். அப்போது மக்கள் எல்லையை கடக்க அதிக நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை எல்லை திறக்கப்பட்டபோது குறைந்தது ஒரு இலட்சம் பேர் கொலம்பியாவிற்குள் நுழைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெனிசுவெலா எதிர்கொண்டிருக்கும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு அடிப்படை பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. (இ-10)

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக கடன்

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 2500 ரூபா வீதம், இரண்டு மாத இடைக்கால கொடுப்பனவை வழங்குவதற்காக பெருந்தோட்ட நிறுவனங்கள் திறைசேரியிடம் இருந்து கடனை பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவகையில் குறைந்த வட்டியுடன், ஒரு பில்லியன் ரூபாவை கடனாக பெறவுள்ளதாகவும், பெருந்தோட்ட நிறுவனங்களும் வங்கிகளும் இதற்கான உடன்படிக்கையை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரவுசெலவு திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியாருக்கான நாள் ஒன்றுக்கு 100 ரூபா அதிகரிப்பு என்ற அடிப்படையிலேயே இந்த 2500 ரூபா கொடுப்பனவை வழங்க பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளன.

இந்த நிலையில் அரச வங்கிகளின் ஊடாக இந்த கடன் வழங்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும் எப்போது இந்த கடன் வழங்கப்படும் எனும் தகவலை அவர் வெளியிடவில்லை.

தமிழ் முற்போக்கு கூட்டமைப்பின் தகவல்களின் படி இந்தக்கொடுப்பனவானது ஒரு கிழமைக்குள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## எதிர்வரும் ஓகஸ்ட் முதல்

# இ.போ.ச.பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கும்

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்கான கட்டணங்களை ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, போக்குவரத்து பிரதி அமைச்சர் அஷோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி பேருந்து கட்டணங்கள் நூற்றுக்கு 6 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும், குறைந்த கட்டணமாக 9 ரூபாய் அற விடப்படும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஏற்படும் செலவுகள் அதிகரித்துள்ளமையாலே கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக, கண்டி - குண்டசாலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே தெரிவித்தார். (இ-10)

# செய்தித்துளிகள்

## களனி கங்கையில் நீராட சென்று பலியான இருவரின் சடலங்கள் மீட்பு

ஹங்வெல்ல பிரதேசத்தில் களனி கங்கையில் நீராட சென்று நீரில் மூழ்கி உயிரிழந்த இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு உயிரிழந்தவர்கள் அதே பிரதேசத்தை சேர்ந்த 19 வயது இளைஞரும் 16 வயதான யுவதியும் என ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர் (இ-10)

## சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் தனியார் துறையினர் முறையிடலாம்

வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட தனியார் துறையினரின் வேதன அதிகரிப்பு உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து ஆராய்வதற்கான விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. தொழில் மற்றும் தொழிற்சங்க அமைச்சினால் 6 பேர் கொண்ட இந்தக் குழு உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தொழிற்றிணைக்களத்தின் சட்ட ஆலோசகர் பி.எஸ்.பத்திரண தலைமையில் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன்படி 2500 ரூபா வேதன அதிகரிப்பு கிடைக்கப்பெறாத தனியார் துறையினர் இந்தக் குழுவில் முறைப்பாடு செய்யமுடியும். ஏற்கனவே இந்தக்குழுவுக்கு 200 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## 16 கோடி ரூபா பெறுமதியான நாணயங்களுடன் மூவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 16 கோடி பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களுடன் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த வெளிநாட்டு நாணயங்கள் சட்டவிரோதமாக டுபாய் நாட்டிற்கு கொண்டு செல்ல முயன்றவேளையிலே விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண்கள் இருவர் அடங்குவதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## கோயிலுக்குச் சென்றவர் மரணம்

மட்டக்களப்பு, பன்குடாவெளிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் கொம்மாதுறை பிரதேசத்தைச் சேர்ந்த கந்தசாமி ஜெயராஜ் (வயது 23) என்பவர் பலியாகியுள்ளார். இவர் வீட்டிலிருந்து இலுப்படிச்சேனையிலுள்ள கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, வீதியில் கட்டாக்காலி மாடுகள் குறுக்கிட்டதன் காரணமாக விபத்து இடம்பெற்றுள்ளது இந்த விபத்து தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-10)

## மாணவி வீடு திரும்பவில்லை

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடியைச் சேர்ந்த மாணவியொருவர் பாடசாலைக்கு சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை என காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். காத்தான்குடியிலுள்ள பெண்கள் பாடசாலை யொன்றில் கல்வி கற்கும் 16வயது மாணவி நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழமை போன்று பாடசாலைக்கு சென்றுள்ளார்.குறித்த மாணவி வீடு வந்து சேரவில்லை யென குறித்த மாணவியின் பெற்றோர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (இ-10)

## உடலுக்குள் போதைப் பொருள் வைத்திருந்த சிறைக் கைதி

சிறைக்கைதி ஒருவரின் உடலினுள் இருந்து 100 பக்கெற்றுகள் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் என்.உபுல்தெனிய தெரிவித்துள்ளார். குறித்த நபரை கடந்த 17 ஆம் திகதி போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக கைதுசெய்து மாளிகாகந்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இதனை தொடர்ந்து சிறைச்சாலை திணைக்கள புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் குறித்த போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட போதைப் பொருளில் 29 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.(இ-10)


## ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதித்திட்டம் விரைவில்

இலங்கையில் உழைக்கும் ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்று முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் கடும் முயற்சி காரணமாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இக்காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் ஊடகவியலாளர்கள் தங்கள் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவைச் சிகிச்சைகளின் போது ஐந்து லட்சம் ரூபா வரையான காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் மத்தியில் இத்திட்டம் ஆரம்பத்தில் செயற்படுத்தப்பட்டு, பின்னர் ஏனைய அமைப்புகளின் ஊடகவியலாளர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. (இ-10)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2016–16.08.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*உதவி செய்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட தனுசு ராசி நேயர்களே!*

துர்முகி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசிநாதன் குரு உங்கள் ராசியைப் பார்க்கிறார். குருபார்க்க கோடி நன்மை என்பதால் இம்மாதம் உங்களுக்கு எல்லா வழிகளிலும் நன்மைகளை வழங்கப்போகிறது. பூமி யோகம் முதல் புதிய வாகனம் வாங்கும் யோகம் வரை அடுக்கடுக்காக யோகங்கள் வந்து அலைமோதும்.

பொருளாதார நிலையில் கணிசமான முன்னேற்றம் கிடைக்கும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள ஆயத்தம் செய்வீர்கள். படிப்படியாக முன்னேற்றம் கண்டு, பாராட்டும்படியான வாழ்க்கையை அமைத்துக்கொள்வீர்கள். சிலருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறையும். உதாசீனப் படுத்தியவர்கள் ஓடி வந்து உதவுவார்கள். உங்கள் எண்ணம் முழுவதும் தொழில் முன்னேற்றம் காண்பதிலேயே இருக்கும்.

மனையில் மங்கள ஓசை கேட்கவும், வந்த பிரச்சினைகள் அகலும். வருங்காலம் நலமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். முன்னோர்களின் சொத்துக்களில் பாகப் பிரிவினை கிடைத்து மகிழ்ச்சிப்படுத்தும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். பெற்றோரின் மகிழ்ச்சிக்குரிய தகவல் தேடிவரவும், பகை மறையவும், பாதியில் நின்ற பணி தொடர வும, குருவின் பார்வைதான் கைகொடுக்கும். சுப கிரகமான குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் சுபசெய்திகள் உங் களைத் தேடி வந்த வண்ணம் இருக்கும். இது போன்ற காலங்களில் புதிய முயற்சி களைச் செய்வது நல்லது. பணியாளர்கள் தொல்லை அகலும். அதேநேரத்தில் வாரம்தோறும் குருபகவான் வழிபாட்டை மேற்கொள்வது நன்மைகளை கூட்டும்.

ஏனென்றால் இம்மாதம் பெயர்ச்சியாகப் போகும் குரு, உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்திற்கு அல்லவா வரப்போகிறார். பத்தில் வரும் குரு பதவி மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது பழமொழி. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, அரசியலில் உள்ளவர் களுக்கும், அதிகாரப் பதவியில் உள்ளவர் களுக்கும் பொறுப்புகள் மாறும். மேலும் ஏழரைச் சனியின் ஆதிக்கமும் நடை பெறுகிறது. வாழ்வை வளமாக்கும் சனியை, சனிக்கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 7,10 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியான புதன், ஜூலை 24ஆம் திகதி சிம்ம ராசிக்குச் செல்கிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் துணை வழியே அன்பு அதிகரிக்கும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன்,ஓகஸ்ட் முதலாம் திகதி சிம்மத்திற்குச் செல்கிறார். 6க்கு அதிபதி 9இல் சஞ்சரிக்கும் பொழுது, கூட்டுக் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்ப டலாம். குடியிருக்கும் வீட்டாலும்




பிரச்சினைகள் உருவாகலாம். அலுவலகத்தில் ஒரு முக்கிய பணிக்காக உங்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாகச் சொன்ன அதிகாரிகள், இப்போது வேறு ஒரு நபரை அனுப்பி வைக்க முன்வரலாம். அதன் விளைவாக சங்கடங்களை சந்திக்க நேரிடும். கட்டிய வீட்டை ஒரு சிலர் விற்கும் நிலையும் ஏற்படலாம்.

**குருப்பெயர்ச்சி பலன்கள்!**

ஓகஸ்ட் 2ஆம் திகதி கன்னி ராசிக்கு குரு வரப் போகிறார். பதவி மாற்றம் தரும் இடம் தான் பத்தாமிடம். பஞ்சாயத்து முதல் பாராளுமன்றம் வரை இடம்பிடித்த தனுசு ராசிக்காரர்கள், கொஞ்சம் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. திடீரெனப் பொறுப்புகள் மாற்றப்படலாம். தெய்வீக சிந்தனை மேலோங்கும். சுயதொழில் செய்வோர் கசப்பான அனுபவங்களை காண்பார்கள். குழந்தைப்பாக்கியம் இல்லாதவர்களுக்கு இப்பொழுது செய்யும் பரிகாரங்கள் பலன்தரும்.

இம்மாதம் ஆறுமுகப்பெருமான் வழி பாடும், அம்பிகை வழிபாடும் இன்பங்களை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இந்த மாதம் நன்மை தரும் மாற்றங்க ளைச் சந்திக்கப் போகிறீர்கள். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். வீடு மாற்றங்கள் விருப்பம்போல் நடைபெறும். உத்தியோகததில் உள்ளவர்கள் நீண்ட தூரப் பயணங்களை விரும்பாமல், வேலையை விடும் முயற்சி யில் ஆர்வம் காட்டுவர். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற் பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். வரவேண்டிய நேரத்தில் பணம் வந்தாலும், செலவுகள் கட்டுக்கடங்காமல் போகலாம். எனவே ஒரு சில சமயங்களில் கடன் வாங்கும் சூழ்நிலை கூட ஏற்படும். விரயச் சனி முடியும் வரை பொறுமை தேவை. அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்

## உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும் நேரம்!



*சிக்கனத்தைக் கடைப்பிடித்து சிறப்பான வாழ்க்கை நடத்தும் மகர ராசி நேயர்களே!*

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதுமட்டுமல்லாமல் சனியின் பார்வையும் உங்கள் ராசியில் பதிகிறது. அஷ்டமத்தில் குருவும், ராகுவும் சஞ்சரிக் கிறார்கள். எனவே மாதத்தின் தொடக்க நாட்களில், எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம். இல்லத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பும் குறையலாம். விடாமுயற்சி செய்தும் வெற்றி தள்ளிப்போகிறதே என்று கவலைப்படுவீர்கள்.

வருமானத்தை விட செலவு கூடுத லாகும். குடும்ப உறுப்பினர்களை திருப்தி ப்படுத்த முடியவில்லையே என்று கவலைப் படுவீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் எதிர்பார்த்த குருப்பெயர்ச்சி நடை பெறப்போகிறது. அதன்பிறகு கருத்து வேறு பாடுகள் அகலும். கைநிறை யப் பொருள் குவியும். பொருத்தமான பலன் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட குருவின் பார்வை பலம் வேண்டும்.

குரு பார்க்கும் ராசிகளில் ஒன்றாக, உங்கள் ராசி அமைந்துள்ளது. எனவே 'கவலை' என்ற மூன்றெழுத்து உங்களை விட்டு அகலப் போகிறது. தொட்ட காரியங் களில் எல்லாம் 'வெற்றி' என்ற மூன்றெழுத்து உங்களோடு வந்திணையப் போகின்றது. பார்க்கும் குருவால் பலவழிகளிலும் நன்மை கிடைக்கும். சப்தம ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்ரன் ஆகிய கிரகங்கள் இணைந்து சஞ்சரிக்கின்றன. அஷ்டமாதிபதியும் 6க்கு அதிபதியும் இணைந்து சஞ்சரிப்பதால், திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றியைப் பெறுவீர்கள்.

திடீரென சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். வாழ்க்கைத் துணை வழியே உத்தியோக சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடுகள் செய்திருந்தால் அதில் அனுகூலங்கள் உண்டாகும். உதிரி வரு மானம் வந்து சேரும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். பெண்வழிப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரலாம். வீடுமாற்றச் சிந்தனைகள் கூட விரைவில் நிறைவேறும். வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபடுவதோடு அம்பிகைக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதும் நல்லது.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஜூலை 24ஆம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6க்கு அதிபதி 8இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறப் போகிறது. திட்டமிடாமல் ஒரு காரியத்தைச் செய்திருந்தால் கூட அதில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக நற்பலன்கள் வந்து சேரும். தொழிலில் லாபம் குவியும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.




உறவினர்கள் பகையை மறந்து உங்களுடன் இணைந்து செயற்படுவர். வெளிநாட்டில் இருந்து வரும் தகவல்கள் ஆச்சரியம் அளிக்கலாம்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் முதலாம் திகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக கல்யாணக் கனவுகள் நனவாகும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். புதிய தொழில் ஒன்றைத் தொடங்கி, அதில் பிள்ளைகளை அமர வைக்கலாம் என்று நினைப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**குருப்பெயர்ச்சிக்காலம்!**

ஓகஸ்ட் 2ஆம் திகதி கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். அப்பொழுது அவர் பஞ்சம பார்வையாக உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். எனவே அதன்பிறகு எடுக்கும் முடிவுகள் சரியானதாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். விலகிச் சென்ற சொந் தங்கள் விரும்பி வந்து சேருவர். பல விதங் களிலும் நன்மை கிடைக்கும் நேரம் இது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், அனுமனையும வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

மாதத் தொடக்கத்தில் விரயங்கள் ஏற்பட்டாலும், மாதத்தின் பிற்பகுதியில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். கணவன் மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட மோதல் அகலும். மாமன் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும். வீடு கட்டும் அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தர்களில் சிலரின் பேச்சுக்கு, மேலதிகாரிகள் செவிசாய்ப்பர். குடும்பத்திற்கான அத்தியா வசியப் பொருட்களை வாங்குவதில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

## மாதத்தின் பிற்பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும்!

(தொடரும்)

இரக்கம் காட்டுங்கள்.
ஆனால் ஏமாந்து போய்விடாதீர்கள்
– மாத்யூ கிறீன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பழியும் பாவமும் பாதிப்பும் தமிழ் மாணவர் தலையில் விழும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்ற முயற்சிகள் நடந்த வண்ணமுள்ளன.

உண்மையில் ஒரு பல்கலைக்கழகத்தை மூடி வைப்பது என்பது நல்லதல்ல.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை உடனடியாக ஆரம்பிப்பது அவசியம் என்பதில் மாற்றுக்கருத்துக்கிடமில்லை.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க முன்னதாக தமிழ் – சிங்கள மாணவர்களிடையேயான ஒற்றுமைப்பாடுகளில் சில இணக்கப்பாடுகளுக்கு நாம் வந்தாக வேண்டும்.

இல்லையேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அடிக்கடி தமிழ் – சிங்கள மாணவர்களிடையே சர்ச்சைகளும் முரண்பாடுகளும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

அவ்வாறான சர்ச்சைகள், முரண்பாடுகள் ஏற்பட்டால் அது பல்கலைக்கழக எல்லை தாண்டி தென்பகுதியில் இனக்கலவரமாக உருவெடுக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

பல்கலைக்கழக மாணவர்களிடையே பல்வேறு காரணங்களால் மோதல்கள் ஏற்படுவது வழமை. அப்போதெல்லாம் குறித்த பல்கலைக்கழகத்தை மூடி ஒரு ஆறுதலை ஏற்படுத்திய பின் மீண்டும் அந்தப் பல்கலைக்கழகம் வழமைபோல் இயங்கும்.

ஆக, இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல்கள் ஒருபோதும் பல்கலைக்கழக எல்லை தாண்டி; அந்தப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பிரதேசத்தில் கூட கலவரத்தை, மோதலை ஏற்படுத்தவில்லை; இதுவே வழமை.

ஆனால் இந்த வழமையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த தமிழ் – சிங்கள மாணவர்களின் மோதல் சம்பவத்தோடு யாரேனும் பொருத்திப் பார்ப்பார்களாயின் அது மகா தவறாகவே இருக்கும்.

ஏனெனில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் – சிங்கள மாணவர்களிடையே மோதல் நடைபெற்றால் அந்தச் சம்பவமானது,

⮝ தமிழ்மாணவர்களால்ஏற்படுத்தப்பட்டதுஎன்றொரு பழியை நம் அப்பாவி மாணவர்கள் மீது சுமத்தும்.

⮝ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த மோதலால் இலங்கையில் வேறு பாகங்களில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் தாக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும்.

⮝ மோதல் சம்பவம் நடைபெறும் போது நிச்சயம் பொலிஸார் உள்நுழைந்து மோதலைத் தடுக்கவென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வர். இலங்கை நாட்டின் துப்பாக்கி என்பதால் அவை தமிழ் மாணவர்களையே பதம் பார்க்கும்.

⮝ மோதல் சம்பவம் நடைபெற்றதும் படைத் தரப்பு யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சிங்கள மாணவர்களை கூவியழைத்து பஸ்களில் ஏற்றி தென்பகுதிக்கு கொண்டு செல்வர். கூடவே சிங்கள மாணவர்களில் ஒரு சிலர் காயப்பட்டால் இராணுவ அம்புலன்ஸ் வண்டிகள் அந்த மாணவர்களை ஏற்றிக்கொண்டு ஒலி எழுப்பியவாறு தென்பகுதியை நோக்கிப் பறக்கும். அங்கு வதந்திகள் வேகமாய்ப் பரவும்.

இதனிடையே ஆளுநர்(கள்), அமைச்சர்கள் அவசர அவசரமாக காயப்பட்ட மாணவர்களை சந்தித்து தென்பகுதி மக்களே ஏன் அமைதியாக இருக்கிறீர்கள் என்பது போல எரி தணல் எடுத்துக் கொடுக்க, அங்கு இனக்கலவரம் வெடிக்கும்.

⮝ இவையாவற்றுக்கும் மேலாக, சிங்கள மாணவர்களிடையே இனந்தெரியாதவர்கள் நுழைந்து (வெசாக்கூடு கொடுப்பது போல) துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளலாம். அவை நடக்கக் கூடிய சாத்தியங்கள் ஆகும்.

இருந்தும் எல்லாப் பழியும் பாவமும் பாதிப்பும் தமிழ் மாணவர்களின் தலையில் விழும் என்பதால்,

யாழ். பல்கலைக்கழக இயங்கு நிலைக்கு முன் மாணவர்களிடையே முரண்பாடு ஏற்படாத ஒரு சூழ் நிலையை தோற்றுவிப்பது மிகமிக அவசியமானது.

## திரவ இயற்கை எரிவாயு மின் நிலையத்தை கெரவலப்பிட்டியவில் இந்தியா அமைக்கின்றது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் கெரவலபிட்டிய பகுதியில், 500 மெகாவாட் திறன்கொண்ட, திரவ இயற்கை எரிவாயு மின்நிலையம் ஒன்றை இந்தியா அமைக்கக் கூடும் என்று இலங்கை அரசாங்க அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, சம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்துக்குப் பதிலாக, திரவ இயற்கை எரிவாயு மின்நிலையத்தை அமைக்குமாறு, இந்தியப் பிரதமரிடம் கேட்டிருந்தார்.

இதையடுத்து, அதுபற்றி கலந்துரையாடுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது அதிகாரிகளைப் பணித்திருந்தார்.

இதுதொடர்பாக இந்திய-இலங்கை கூட்டு பணிக்குழு பல்வேறு தெரிவுகள் தொடர்பாக ஆராய்ந்தது. இந்தநிலையிலேயே கெரவலப்பிட்டியவில், 500 மெகாவாட் திறன கொண்ட திரவ இயற்கை எரிவாயு மின் நிலையம் ஒன்றை அமைக்கும் யோசனையை இலங்கைத் தரப்பு முன்வைத்துள்ளது.

கொழும்பை அடுத்த கெரவலப்பிட்டியவில், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 300 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின்நிலையம் ஒன்றை அமைத்திருந்தது.

திரவ இயற்கை எரிவாயு மின் நிலையத்தை அமைப்பதற்கு சம்பூரை விட கெரவலப்பிட்டிய மிகச் சிறந்த இடமாக கருதப்படுகிறது. மேற்கு கரையோரப் பகுதியில் அமைந்திருப்பதால், திரவ இயற்கை எரிவாயு உற்பத்தியின் முக்கிய கேந்திரமான கட்டாருக்கு இது மிக அண்மையில் உள்ளது.

குளிரூட்டுவதற்கான கடல் நீரைப் பெறுவதற்கு வசதியாக, சம்பூரும் கடலோரப் பகுதியிலேயே அமைந்துள்ளது.

அனைத்துலக சந்தையில் திரவ இயற்கை எரிவாயு மிகவும் குறைந்த விலையில் கிடைப்பதால், அனல் மின் திட்டங்களை விட, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டங்களுக்கு செலவு குறைவு என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கெரவலப்பிட்டிய திரவ இயற்கை எரிவாயு மின் நிலையம், இந்திய-இலங்கை ஒத்துழைப்புடன் இயக்கப்படுமா அல்லது ஏற்கெனவே சம்பூரில் மின் நிலையத்தை அமைப்பதற்காக கூட்டு முயற்சியாக உருவாக்கப்பட்ட திருகோணமலை மின் நிறுவனம் மூலம் இயக்கப்படுமா என்பது இன்னமும் தெளிவாகவில்லை. (செ-11)

## சப்ரகமுவ பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இன்று (புதன்கிழமை) முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் விடுதி வசதிகளை பெற்றுக் கொண்டுள்ள மாணவர்களை உடனடியாக விடுதிகளுக்கு திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

வைரஸ் காய்ச்சலொன்று மாணவர்களிடையே பரவி வருவதாக தெரிவித்து கடந்த 08 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## யாழ்.சிறையிலுள்ள 18 கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 கைதிகள், நேற்று செவ்வாய்க்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கஞ்சா உடைமையில்வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த 18 கைதிகளும் தங்கள் வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்துமாறு கோரியே இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமது கோரிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களுக்கு கைதிகள்ால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் 38 கைதிகள் ஈடுபட்டிருந்த போதிலும் 18 பேரே தற்போது வரை போராட்டத்தை தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தொலைபேசி கட்டணத்துக்கு வற்வரி இல்லை - சிறிசேன

(கொழும்பு)

தொலைபேசி கட்டணங்களுக்கு வற் வரி சேர்க்கப்படாது என தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தின பணிப்பாளர் நாயகம் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பினை இடைநிறுத்துமாறு அண்மையில் உயர் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்தநிலையில் குறித்த தீர்ப்பிற்கு அமைய தொலைபேசி கட்டணங்களில் வற்வரியை சேர்க்க வேண்டாம் என தொலைபேசி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக பணிப்பாளர் நாயகம் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன் படி வற் வரி அதிகரிப்பின் அடிப்படையில் தொலைபேசி கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படாது என நிறுவனங்கள் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## திட்டமிட்டபடி பாதயாத்திரை

அரசாங்கத்துக்கு எதிரான ஜன சட்டன பாத யாத்திரை திட்டமிட்டபடி கண்டியில் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கண்டி ராணி மாளிகை முன்பாக எதிர்வரும் 28ஆம் திகதி பாதயாத்திரையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பார். எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதிஇந்தப்பாதயாத்திரை கொழும்பில் நிறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

## ஆக்கங்கள் கோரப்படுகின்றன

கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட ஆக்க இலக்கிய வாதிகளிடமிருந்து திருவுடையாள் 06 இற்கான சிறுகதை, கவிதை, குறுநாடகம் ஆகிய வற்றிற்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

சிறுகதை 06 பக்கத்திற்கு மேற்படாமலும், கவிதை 30 வரிகளுக்கு மேற்படாமலும், குறுநாடகம் 06 பக்கத்திற்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் தட்டச்சு செய்யப்பட்டு பிரதேச செயலகம், கரவெட்டி என்னும் முகவரிக்கு 20.08.2016ற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ கேட்டுள்ளார். (செ)

## ஏழு எம்.பிக்களை கைது செய்ய திட்டம்

### கம்மன்பில தகவல்

ஜூலை 28ஆம் திகதியளவில் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் ஏழு உறுப்பினர்களை சிறை வைக்க தயாராகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னை இரண்டாவது முறையாக சிறையில் வைத்து விடுப்பளிக்க தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரணியின் பின்னர் அந்த ஓய்வை பெற்றுக் கொள்ள வாய்ப்பை வழங்குமாறு அரசாங்கத்திடம் தான் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது, மாபெரும் டீல் காரர்களை பிடிக்கப் போவதாக கூறினர், ஆனால் சில்லறை காரணங்களுக்காக உள்ளே அனுப்பும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ மற்றும் நாமலராஜபக்ஷ ஆகியோரை கைதுசெய்தது இவ்வாறான சில்லறைக் காரணங்களுக்காகவே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மகிழ்ச்சி தரும் அனுபவம்



✦ இடைவிடாமல் கடவுளைச் சிந்திப்பதும், மனம் ஒன்றி வழிபாடு செய்வதும் மகிழ்ச்சி தரும் இனிய அனுபவங்கள்.

✦ சொந்தக்காலில் நிற்கும் திறமையை பிள்ளைகளிடம் உருவாக்க வேண்டியது பெற்றோரின் கடமை.

✦ பயனற்ற வீண் ஆராய்ச்சியைக் கைவிட்டு, கடவுளை பூரணமாக நம்பிச் செயலில் ஈடுபடுங்கள்.

✦ ஞானிக்கு கடவுள் ஒளிமயமாகவும், சாமான்ய மனிதர்களுக்கு அன்பு மயமாகவும் காட்சியளிக்கிறார்.

✦ கடவுள் கேட்டதை எல்லாம் தரத் தயாராக இருக்கிறார். அதற்கான தகுதியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டி முடிவுகள்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளின் வீர, வீராங்கனைகளுக்கிடையிலான தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகியது. நேற்று முன்தினம் 18 ஆம் திகதி வரை நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு திணைக்களத்தின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டார். இந்த விளையாட்டுப்போட்டியின் முடிபுகள் வருமாறு,

**19 வயது பெண்**
**உயரம் பாய்தல்**

பளை மத்திய கல்லூரியை சேர்ந்த வை.வனிஷா முதலாமிடத்தையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியை சேர்ந்த எம்.நர்மதா இரண்டாமிடத்தையும் அதே கல்லூரியை சேர்ந்த என்.டிலக்ஷனா மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**21 வயதுப்பிரிவு**
**நீளம் பாய்தல்**

சென். ஆன்ஸ் ம.ம.வி யைச் சேர்ந்த எஸ்.வேனிலன்மார்க் முதலாமிடத்தையும் யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்த டி.ஜொயக்ஷ் இரண்டாமிடத்தையும் காரைநகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கோகுலன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**17 வயதுப் பிரிவு**
**குண்டு போடுதல்**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஏ.ஆகாஸ் முதலாமிடத்தையும் ஹாட்லிக் கல்லூரியைச்சேர்ந்த பி. ஆனந்த் இரண்டாமிடத்தையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச்சேர்ந்த ஐ. இசைவாணன் மூன்றாமிடத் தையும் பெற்றுக்கொண்டனர்.

**17 வயதுப் பிரிவு**
**தட்டெறிதல்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச்சேர்ந்த எஸ். சங்கவி முதலாமிடத்தையும் உரும்பிராய் சிவத்தமிழ் வித்தியாலயத்தைச்சேர்ந்த ஆர். டர்சி இரண்டாமிடத்தையும் யாழ் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த என். சிவானுயா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**17 வயதுப் பிரிவு**
**கோலூன்றிப் பாய்தல்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச்சேர்ந்த ஏ.பவிதரன் முதலாமிடத்தையும் அருணோதயாக் கல்லூரியைச்சேர்ந்த யு.சலக்ஸன் இரண்டாமிடத்தையும அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். யதுஷன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்

**19 வயதுப்பிரிவு**
**நீளம் பாய்தல்**

யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி. கஜலக்ஸ்மன் முதலாமிடத்தையும் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். இனோக்ராஜ் இரண்டாமிடத்தையும் ஞானசாரியார் கல்லூரியைச்சேர்ந்த கே. யசிந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**13 வயதுப்பிரிவு**
**உயரம் பாய்தல்**

பலாலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆர். நிலவாணி முதலாமிடத்தையும் நெலுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கே.காவியா இரண்டாமிடத்தையும் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த வி. விதுஷா மூன்றாமிடத்தையும்பெற்றுக்கொண்டனர்.

**15 வயதுப்பிரிவு**
**தட்டெறிதல்**

ஹாட்லிக் கல்லூரியைச்சேர்ந்த என்.பிரவீணன் முதலாமிடத்தையும் இமையாணன் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எம். திவன்சயன் இரண்டாமிடத்தையும் ஹாட்லிக் கல்லூரியைச்சேர்ந்த இ. மகீபன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**21 வயதுப் பிரிவு**
**குண்டு போடுதல்**


கனகராஜன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என். நிஷாந்தினி முதலாமிடத்தையும் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். சயந்தினி இரண்டாமிடத்தையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச்சேர்ந்த கே. சர்மிளா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**15 வயதுப் பிரிவு**
**உயரம் பாய்தல்**

பலாலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஏ. பவித்திரா முதலாமிடத்தையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச்சேர்ந்த சி. தமிழினி இரண்டாமிடத்தையும் மகாஜனாக் கல்லூரியைச்சேர்ந்த எஸ். தீபிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண் டனர்.

**17 வயதுப் பிரிவு**
**நீளம் பாய்தல்**

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச்சேர்ந்த விக்ரோறியா ஜமானி ஜெனிற்றா முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச்சேர்ந்த ஏ. மேரி தமயந்தினி இரண்டாமிடத்தையும் ராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த பி. பவித்திரா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.






**15 வயதுப்பிரிவு**
**ஈட்டி எறிதல்**

மடுகந்தை தேசிய பாடசாலையைச் சேர்ந்த பி.ஜி. எம்.எம். கௌசல்யா முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச்சேர்ந்த ஏ. மதுஷா இரண்டாமிடத்தையும் பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ. எனிபியூலா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**13 வயதுப் பிரிவு**
**நீளம் பாய்தல்**

வட்டக்கச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி. தனுசிகன் முதலாமிடத்தையும் சவேரியார்புரம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி.பிரதா குமார் இரண்டாமிடத்தையும்கனகாம்பிகைக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி. தமிழின்பன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது பெண்**
**5000 மீற்றர்**

கற்சிலைமடு அ.த.க.பாடசாலையைச்சேர்ந்த எஸ். விதுஷா முதலாமிடத்தையும் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். சுதர்மதி இரண்டாமிடத்தையும் அத்தியார் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஆர்.டயானி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

*(தொடரும்...)*

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டிகள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 4.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

மட்டுவில் சனசமூக நிலையத்தின் 51 ஆம் ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# சைனிங்ஸ் விளையாட்டுக்கழக மென்பந்தாட்ட இறுதிப்போட்டி

## சம்பியனானது றெயின்போ









வல்லைக்குட்டப்ட்ட றெயின்போ, தீருவில், சைனிங்ஸ், இளங்கதிர், நேதாஜி, உதயசூரியன், ரேவடி ஆகிய ஏழு கழகங்களுக்கிடையில், அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம், லீக் முறையில் நடத்திய இருபதுக்கு-20 தொடரில் றெயின்போ விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது. றெயின்போ விளையாட்டுக்கழகத்துக்கும் தீருவில் விளையாட்டுக் கழகத்துமிடையே அண்மையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தீருவில் விளையாட்டுக்கழகம், 17 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில், பிரதீப் 23 ஓட்டங்களைப்பெற்றதோடு, பந்து வீச்சில் ருதேஷா நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 63 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றெயின்போ விளையாடுக் கழகம், 14 ஓவர்களில் நான்கு விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில், பிரணவன் 21, பிரகலாதன் 12 ஓட்டங்களைப் பெற்றதோடு, பந்துவீச்சில் பிரதீப், குமரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக்கைப்பற்றினர்.

இறுதிப் போட்டியின் நாயகனாக ருதேஷா தெரிவானதோடு தொடரின் நாயகனாக பிரதீப் தெரிவானார். தொடரில் 163 ஓட்டங்களைப் பெற்று பிரதீப் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றதோடு, 22 விக்கெட்டுகளைக் கைப்பற்றி, தொடரில் அதிக விக்கெட்டுகளை ஸ்ரீகரன் கைப்பற்றியிருந்தார்.

மென்பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு முன்பாக உதைபந்தாட்ட காட்சிப் போட்டி நடைபெற்றது. இந்த காட்சிப் போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழக திருமணமானவர் அணியும் திருமணமாகாத அணியும் மோதியது. இப்போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழக திருமணமானவர் அணி 2:1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மென்பந்தாட்ட இறுதிப்போட்டியில்,

ஆட்டநாயகன் -ருதேசா (றெயின்போ விளையாட்டுக்கழகம்), அதிக விக்கெட்-சிறி (றெயின்போ விளையாட்டுக்கழகம்), அதிக ஓட்டங்கள்-பிரதீப் (வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம்), தொடர்நாயகன்-பிரதீப் (வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம்). (க)

## இனவாதத்திற்கு...

விஞ்ஞான பீடத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக கொழும்பில் இருந்து வருகை தந்த அமைச்சர் குழுவினருக்கும் பல்கலைக்கழக சமூகத்தினருக்குமிடையே நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர் குழுவினர் பல்கலை சமூகத்தினருடன் கலந்துரையாடியிருந்தனர். அதன்போது இது ஒரு சிறிய குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் என்றும். 2011 ஆம் ஆண்டில் இருந்து யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே பெரியளவில் பிரச்சினைகள் நடந்ததில்லை என்பதையும் அறிந்து கொண்டனர்

அனைத்து மாணவர்களும் தாம் புரிந்துணர்வுடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர். இது திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு விடயம் இல்லை எனவும் ஒரு சில மாணவர்களின் பிடிவாதத்தால் ஏற்பட்ட சம்பவம் எனவும் கூறியிருந்தார்கள்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் அறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்பட வேண்டும எனவும் அமைச்சர்கள் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பிற இன மாணவர்...

கையில்,

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கடந்த வாரம் நடைபெற்ற சம்பவமானது ஒரு சில மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாட்டினால் ஏற்பட்ட மோதல் சம்பவம் என நாம் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். அதுவே உண்மை. பல்கலைக்கழக நிர்வாகத்தினர் சரியான புரிதலுடன் இந்த விடயத்தை அணுகி இப்பிரச்சினைக்கு தீர்வினை தர முன்வந்துள்ளார்கள்.

அமைச்சர்களுடனான கலந்துரையாடலில் இச் சம்பவத்தின் குழப்பத்துக்கான காரணத்தை தெரியப்படுத்தியிருந்தோம். எமது நிலைப்பாட்டினை தெரியப்படுத்தியிருந்தோம். எமது கல்வி நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என தெரிவித்திருந்தோம்.

அதாவது இது ஒரு தேசிய பல்கலைக்கழகம். யாழ் பல்கலைக்கழகம் என்ற ரீதியில் எமக்கென தனியான கலாசார பண்பாடு என்று ஒன்று உள்ளது. அதை எந்தவகையிலும் தணிக்கை செய்யவோ விட்டுக்கொடுக்கவோ முடியாது. ஆனால் பிற இன மத மாணவர்களுக்கான மதிப்பினை வழங்கி வருகிறோம். எமது நிர்வாகமும் அவர்களுக்கான முன்னுரிமைகளை வழங்கி வருகிறது.

அத்துடன் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு முரணான எந்த செயற்பாட்டினையும் மாணவர்கள் மேற்கொள்வதில்லை அந்த வகையிலேயே அன்றைய சம்பவத்தை பேசித் தீர்ப்பதற்கு சென்ற வேளை அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் அப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட்டு எதிர்வரும் நாட்களில் அனைத்து பீடங்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என நம்புகிறோம்.

எமது இன, மத, பண்பாட்டு அடையாளங்களை நாம் எவருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டோம். அனைத்து கலாசாரங்களையும் மதிப்புடன் அணுகி அறிந்து கொள்ள விரும்புகிறோம். ஆனால் எங்கள் இன,மத, கலாசாரத்தை நசுக்குவதற்கு இடமளிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9-4)

## இன வேறுபாடு...

கொழும்பில் இருந்து 3 அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் யாழிற்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் பல்கலைக்கழக சமூகத்தினருடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பல்கலையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பாக பல்கலை சமூகத்தினரின் நேரடியான கருத்துக்களை கேட்டறிவதற்கு வந்திருந்தோம். அவர்களுடன் கலந்துரையாடிய போது சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடு இந்த பல்கலைக்கழகத்தில் இருந்ததில்லை என மாணவர்கள் அனைவரும் இணைந்து கூறியிருக்கிறார்கள்.

அத்துடன் தாங்கள் எல்லோரும் ஒன்றாக மறுபடியும் கல்விச்செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் சிலருடைய திட்டத்தின் அடிப்படையில் அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன. கடந்த வாரம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு பல்கலையின் துணைவேந்தர் விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளார். எதிர்வரும் 2 கிழமைகளுக்குள் மேற்படி விசாரணைகள் முடிவடையும். அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அசம்பாவிதங்களை மேற்கொள்ள நினைப்பவர்கள் தமது நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற இன வேறுபாடு இல்லாமல் இப் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் இயங்கும் என பல்கலைச் சமூகத்தினர் அனைவரும் அதற்கு உறுதி மொழி கூறியுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ரூபாய் 16 கோடி...

பதினாறரைக் கோடி ரூபாயிற்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பணத்தை நாட்டிலிருந்து கடத்துவதற்கு முயற்சித்த மூவர், விமான நிலைய சுங்கப்பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்ணொருவர், தமது பயணப் பொதியில் சூட்சுமமான முறையில் இந்த பணத்தை மறைத்துக் கொண்டு செல்வதற்கு முயற்சித்துள்ளார்.

இது தொடர்பாகக் கிடைத்த தகவலின் பிரகாரம், அதிகாலை 03.20க்கு டுபாய் நோக்கிப் பயணிப்பதற்காக வருகைதந்த பெண்ணொருவரின் பயணப்பொதிகளை சோதனைக்கு உட்படுத்திய போதே இந்தப் பணத்தொகை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் பல நாட்டு நாணயங்களும் அடங்குவதாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கை நாணய செலாவணியின்படி, சாதாரண விமானப் பயணியொருவர் 5ஆயிரம் டொலர் பெறுமதியான பணத்தையே எடுத்துச்செல்ல முடியுமென்பதுடன் வங்கியொன்றினால் அனுமதிக்கப்படுமாயின் 10ஆயிரம் டொலருக்கு சமமான வெளிநாட்டு நாணயங்களைக் கொண்டு செல்ல முடியும்.

அந்தத் தொகையை விட கூடுதலான பணத்தைக் கொண்டு செல்லும்போது செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முழு அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் அவசியம்.

கைது செய்யப்பட்டுள்ள பெண்ணிடம் மேற்கொண்ட விசாரணையின்போது, பணம செலுத்துவதாக ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த வெளிநாட்டு நாணயங்களை டுபாய் நோக்கி எடுத்துச் செல்வதற்கு முன்வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஏனைய இரு சந்தேக நபர்களும் அந்த பெண்ணுக்கு உதவியாகச் சென்றவர்களாவர். (செ-11)

## முஸ்லிம் மக்கள்...

உறுப்பினர் இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவுகளில் இன்னமும் முன்னேற்றங்கள் அவசியப்படுகின்றன, யுத்தம் நிறைவடைந்த பின்னர் இதுவரையான காலப்பகுதியில் இடம் பெற்றுள்ள தமிழ் முஸ்லிம் உறவுகள் சார்ந்த செயற்பாடுகளில் எம்மால் திருப்தியடைய முடியாதுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களால் தமிழ் மக்கள் அடக்கப்படுவதாக கூறப்படுகின்றது. அதேபோன்று வடக்கில் தமிழ் மக்களால் முஸ்லிம் மக்கள் அடக்கப்படுவதாக கூறுகின்றார்கள். மன்னாரிலே இனரீதியான முரண்பாடுகள் இருப்பதை நான் அவதானித்தேன். இவை நல்ல ஆரோக்கியமான விடயமல்ல. இதுவிடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முற்போக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இது என்னுடைய பணிவான அவதானம் என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா, முஸ்லிம் மக்களும் எங்களுடைய மக்களே நாங்கள் அவர்களைப் பிரித்து நோக்கவில்லை, ஆரம்பகாலத்தில் எமக்கிடையேயான உறவுகள் சிறப்பாக இருந்தன, ஆனால் பிற்காலத்தில் அதில் பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு மாத்திரமுண்டான கட்சி அல்ல, அதிலே முஸ்லிம் தேசத்தையும் நாம் இணைத்தே இருக்கின்றோம். தந்தை செல்வா இதனை ஆரம்பம் முதல் வலியுறுத்தியிருந்தார். ஆனால் பிற்பட்ட காலங்களில் அதில் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

எங்களோடு ஆரம்பகாலங்களில் இணைந்திருந்த முஸ்லிம் பிரதிநிதிகள் தமிழ் முஸ்லிம் நல்லிணக்கத்தினை மேம்படுத்தினார்கள். தலைவர் அஷ்ரப் எமது கட்சியின் உறுப்பினரே பிற்காலத்தில் "முஸ்லிம் விடுதலை முன்னணி" என்ற கட்சியில் இணைந்தார், அதனைத் தொடர்ந்து சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார்.

இவை எம் மீது கொண்ட கோபத்தின் வெறுப்பின் அடிப்படையில் உருவானதல்ல, முஸ்லிம் சமூகத்தில் நிலவிய தேவையின் நிமித்தம் உருவாகியவை. முஸ்லிம் காங்கிரஸை உருவாக்குவதிலே அஷ்ரபுக்கு, அண்ணன் அமிர்தலிங்கம் போன்றோர் கூடுதல் பக்கபலமாக இருந்தார்கள், ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இப்போது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அரசியல் ரீதியாக துருவப்பட்டு நிற்கின்றார்கள். புலிகள் இருக்கின்ற காலத்தில் இமாமை முஸ்லிம் மக்கள் சார்பாக பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தோம். வடக்கு மாகாணசபையிலே அஸ்மினை நியமித்திருக்கின்றோம். ஆனால் இவை போதுமானதல்ல. முஸ்லிம் மக்களோடு இன்னமும் நெருக்க மாக பணியாற்ற வேண்டும் என்ற உங்களது ஆலோசனையை நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன், மற்றும் வடக்கு மாகாணசபையின் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர். (செ-11)

## 3 தமிழ் மாணவர்...

யாழ் பல்கலைக்கழக மோதல் சம்பவத்தினை அடுத்து மாணவர்கள் சிலரை விசாரணைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றைய தினம் வருகை தருமாறு பொலிஸார் தெரிவித்திருந்ததாகவும் ஆனால் தாம் செல்லவில்லை எனவும் மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஒருவர் வலம்புரியிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் அந்த பிரதிநிதி எம்மிடம் தெரிவித்துள்ளார். எனினும் மாணவ ஒன்றியத் தலைவர் கைது செய்யப்படும் பட்சத்தில் தாம் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளனர்.

மோதலில் காயமடைந்த சிங்கள மாணவன் ஒருவர் கொழும்பு வைத்தியசாலையில் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே மாணவர் ஒன்றிய தலைவரை, பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் கீழ் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை விஞ்ஞான பீட இரண்டாம் வருட மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதன் போது வழமைக்கு மாறாக சிங்கள மாணவர்கள் கண்டிய நடனம் மூலம் மாணவர்களை தாமும் வரவேற்க வேண்டும் எனவும் முரண்பட்டனர். எனினும் தமிழ் மரபுப்படி மாணவர்கள் அழைத்து வரப்பட்ட வேளை,

திடீரென எந்த அறிவிப்பும் இன்றி சிங்கள மாணவர்கள் கண்டிய நடனத்தை அங்கு கொண்டுவந்து ஆடினார்கள். இதனால் ஆத்திரமடைந்த தமிழ் மாணவர்கள் முன்னறிவிப்பு ஏதுமின்றியும், நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக்கு மாறாக எவ்வாறு கண்டி நடனம் கொண்டுவரப்பட்டது என சிங்கள மாணவர்களிடம் கேட்டனர். இதன்போது வாக்குவாதம் முறுகல் நிலைக்கு செல்ல இரு தரப்பும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பு மாணவர்களையும் சமரசத்திற்கு கொண்டுவர முயன்ற போது, திடீரென சிங்கள மாணவர்களால் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தாக்கப்பட்டார். அதனை தொடர்ந்து பீடாதிபதியும் தாக்கப்பட்டார். இந்த சம்பவங்களை அடுத்து இருதரப்பு மாணவர்களும் கற்களாலும், கொட்டன்களாலும் தாக்குதலில் ஈடுபட, பல்கலைக்கழகமே கலவர பூமியாக காணப்பட்டது.

இதன் காரணமாக பொலிசார் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர், பொலிசார் விசாரணை மேற்கொண்ட நிலையில், நேற்றைய தினம் பொலிசாரின் புலனாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்று உள்ளதாகவும் அதில் ஒருசில தமிழ் மாணவ தரப்பே தூவறிழைத்தது எனத் தெரியவந்துள்ளதாகவும் குறிப்பாக மாணவர் ஒன்றிய தலைவரே பிரச்சினைக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டு குறித்த மாணவன் உட்பட மூவரை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறும் அழைப்பு விடுத்துள்ளனர்.

எனினும் நேற்று நள்ளிரவு வரை குறித்த மாணவன் கைது செய்யப்படவில்லை. எனினும் மாணவனை கைது செய்வதற்கான முயற்சிகள் பொலிஸ் தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை மாணவனை பல்கலை நிர்வாகம் பொறுப்பேற்று பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லும் முயற்சிகளும் இடம்பெற்று வருவதாகவும் அறிய முடிகின்றது.

இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் தி.வேல்நம்பியை தொடர்பு கொண்டு கேட்டபோது, எந்த மாணவரும் நேற்று வரை கைது செய்யப்படவில்லை எனக்கூறினார்.

மாணவர்கள் கைது நடவடிக்கை தொடர்பில் அவசர நடவடிக்கைகள் எதுவும் வேண்டாம் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றிரவு அவசரமாக கோரியுள்ளதாகவும் அறிய முடிகிறது. (செ-4)

**புலமைப் பரிசில் மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி**

வெளிவந்துவிட்டது ! புகழ்

புகழ் வெளியீட்டாசிரியர் லோ.விஜேந்திரனின்

**"புலமைப்பரிசில் வெற்றியின் இரகசியங்கள்"**

வெற்றி பெற விரும்பும் ஒவ்வொரு மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய ஒரு நூல்

- பரீட்சை நெருங்கும் வேளையில் வினைத் திறனான கற்றலுக்கான நுட்பங்கள்.
- பரீட்சை எழுதும் இரண்டு மணி நேரத்தையும் வினைத்திறனாகப் பயன்படுத்தி உயர் புள்ளி பெறுவதற்கான நுட்பங்கள்.
- இறுதி நேரக் கற்றல், பரீட்சை எழுதும் நேரத்தில் மாணவர் விடும் தவறுகளும் - தீர்வுக்கான ஆலோசனைகளும்.
- மாணவர்களுக்கு பரீட்சை பற்றிய தெளிவை ஏற்படுத்தி அவர்களைத் தைரியமாகப் பரீட்சைக்கு அனுப்பி வையுங்கள்.

(5236)

நகரின் முன்னணி புத்தகசாலைகளில் கிடைக்கும்.

விலை : 75/- T.P : 0774118950



**வேலைவாய்ப்பு**

யாழ்-கச்சேரியடியில் உள்ள அச்சகத்திற்கு பணியாளர் தேவை. (பெண்கள் மட்டும்)

**077 5040 714**



**Personal Classes**

UK பட்டதாரி ஆசிரியரால் Spoken English With Grammar உங்களின் வசதிக்கேற்ப வீடுகளில் வந்து கற்பித்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு :- Raj - 0766151837 (5280)



**பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு**

(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு

**வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி**

O/L உடன் Business & Hotel Management UK Certified

CERTIFICATE ▶ DIPLOMA ▶ DEGREE

With FREE >>> English Course

2016 A/L மாணவர்கள் JULY 30 ற்குள் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி

(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

(C-5242)

SIKARAM ACADEMY Business · Hospitality · English SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk Sikaram Academy 021 222 0011

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)



**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதி யில் கடைத்தொகுதியுடன் கூடிய 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0769690597 (5272)



**காணி விற்பனைக்கு**

நாவலர் வீதி நல்லூரில் அமைந் துள்ள 1 1/2 பரப்பு காணி விற்பனைக் குண்டு.

தொடர்பு - 077 27 20 103 (5286)


## ஜனாதிபதி, பிரதமர்...

பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

எமது ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி இல்லை என்றால் பிரதமர் நாட்டில் இருப்பார்.

ஆனால் தற்போது யார் நாட்டில் இருக்கின்றனர் என்பது யாருக்கும் தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு நாட்டிலும் இவ்வாறு நடைபெறாது. ஜனாதிபதி இல்லை என்றால் பிரதமர் நாட்டில் பொறுப்புக்களை ஏற்று செயற்படுவார்.

ஆனால் இலங்கையில் தற்போதுள்ள நல்லாட்சியில் யார் நாட்டில் இருக்கின்றனர் என்பது யாருக்கும் தெரியாது.

ஜனாதிபதி நாட்டில் இல்லை. பிரதமரும் நாட்டில் இல்லை. போதாதற்கு சபாநாயகரும் நாட்டில் இல்லை.

இவ்வாறானதொரு நிலையில் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவிற்கு வேறு யோசனை தோன்றி ஆட்சியில் கைவைத்துவிட்டால் என்ன செய்வது?

எனவே இது பொறுப்பற்ற செயல். இன்று நாட்டில் வீதியில் செல்கின்றவர்களை அழைத்து பதவிகளை கொடுக்கும் நிலைமைக்கு நாடுவந்துள்ளது என அவர் குறிப்பிட்டார். (செ-11)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

FRENCH பிரெஞ்சு மொழி

உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!

(5265)

☎ 021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



**உடனடியாகத் தேவை**

எமது தனியார் காரியாலயத்துக்கு கணனி அறிவுடைய (M.S.Office) பெண் Management Assistant, Accounts Clerk தேவை.

**21 வயதிலிருந்து 40 வயதுவரை**
**சம்பளம் தகுதிக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.**

நேர்முகத் தேர்வு சனிக்கிழமை (23.07.2016) மு.ப. 10 மணிக்கு 201 / 7, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறும். (C-5241)



**எஞ்சின் விற்பனைக்கு**

2C வான் எஞ்சின் Injector Pump, Powesr Stering, A/C கொம்பிறேசர், கிளச் பிளேற், பிறெஷர் பிளேற் ஆகிய அனைத்தும் கொண்ட முழு எஞ்சின் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 0777 474 111 (C-5237)



**வாடகைக்கு உண்டு**

வியாபார ஸ்தாபனம் ஒன்று பஸ் நிலையம், ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு முன்பாக முதலாம் மாடியில் ஏறத்தாழ 3000 சதுர அடி கொண்ட இடம் வாடகைக்கு உண்டு.

முக்கிய குறிப்பு :- கல்வி நிலையம் நடாத்துவதற்கு மிகச்சிறந்த இடம். (C-5238)

தொடர்புகளுக்கு :- 0777 474 111


## கோத்தாவும்...

தர்கள் பலர் எதிர் வரும் நாட்களில் கைது செய்யப்படலாம் என அரச வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறித்த முக்கியஸ்தர்களின் பட்டியலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச நிதிகள் மற்றும் சொத்துக்களை ராஜபக்ஷ நிதியத்திற்கு பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கைது செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கைதான...

பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷ, முதுகு வலி காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னரும் விளக்கமறியலில் இருந்த போது முதுகு வலி என்று கூறி கொழும்பு தேசிய மருத்துவ மனையிலேயே பெரும்பாலான நாட்களைக் கழித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


**அவன்காட் பாதுகாப்புச்சேவை பதவி வெற்றிடம்**

JSO, SSO ஆகிய பதவிகளுக்கு மேல் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களில் பணிநிலை கோரப்பட்டுள்ளது.

தகைமைகள் :- G.C.E O/L சித்தி
சிறந்த தேக ஆரோக்கியம் (5275)

முன்னாள் படை வீரர்கள் / காவல் அதிகாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :- ஜூட் - 0772812995/0777724593

நேர்முகத் தேர்வுக்கு ஆவணங்களுடன் வரவும்



**Are you looking for a challenging career as an English Teacher?**

We are rapidly growing dynamic higher education provider dedicated to achieving excellence in quality education to our students. We are currently offering fully comprehensive and accredited professional and academic programs in Sri Lanka through our branches in Colombo and Jaffna.

***Are you equipped with***

- *A degree, diploma or equivalent qualification in English.*
- *Must process good presentation and communication skills.*
- *Pleasant personality with art of teaching.*
- *Minimum 2 year experience in teaching English.*



*Only female teacher's below 40 of age must apply.

**Unique remuneration package awaits the right candidates.**

Interested candidates may send your completed CV with your photo and Names, Telephone Numbers of non-related referees within 10 days of this advertisement to career@k-aims.com 0768 268 211

K-AIMS ENGLISH SCHOOL

NO 147 2/2, K.K.S Road, Jaffna. (C-5239)



**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(C-5236)

CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062



**மகாஜனன்களின் ஒன்றுகூடல் - 30.07.2016**

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் பழைய மாணவர்களுக்கான இவ்வருட ஒன்றுகூடலும் இராப்போசன நிகழ்வும் 30.07.2016 (சனிக்கிழமை) மாலை 3.00 மணி முதல், கல்லூரி திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவு நுழைவுச்சீட்டுக்களே அச்சிடப்பட்டுள்ளமையால் முற்கூட்டியே நுழைவுச் சீட்டுக்களை பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களிடமோ அல்லது கல்லூரியின் பிரதி அதிபர் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ள முடியும்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்
மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை

(C-5235)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-21

**பகுதி-I** **நேரம்:- 45 நிமிடங்கள்**


◆ சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. பின்வருவனவற்றில் ஒருவரின் மனதிற்கு உவமானமாக அமையாதது எது?
 1) பாறாங்கல் போன்று அசையாதது.
 2) இடியப்பச்சுருள் போன்று சிக்கலானது.
 3) நீராவி போன்று கடினமானது.

02. ஒருவர் கோபப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் முகபாவத்துக்கு உகந்த உவமானம் பினவருவனவற்றுள் யாது?
 1) தீப்பந்தம் போன்று சிவப்பானது.
 2) காலையில் மலர்ந்த மலர் போன்று பிரகாசமாகியது.
 3) கவலையில் வாடி வதங்கியது.
 4) பால் போன்று வெண்மையானது.

03. மேலிருந்து போட்ட பொருள் கீழே விழ நேரிடும் என்பதை விளக்கும் கூற்றைத் தெரிவு செய்க.
 1) கீழிருந்து போட்டால் மேலே போகும்.
 2) மேலிருந்து போட்டால் கீழேயும் வரும் அதேவேளை மேலேயும் போகும்.
 3) மேலிருந்து போட்ட எதுவும் கீழ்நோக்கியே வரும்.
 4) கீழிலிருந்து மேலே வீசிய பொருள் கீழே வராது.

04. ஒரு மாணவர் பரீட்சை செய்யும் போது வெறுப்போடு செய்வதை காட்டுவதற்கு உகந்த உவமானம் யாது?
 1) இனிப்பான பானத்தை விரும்பி குடிப்பது போல் காணப்படல்.
 2) கசப்பான மருந்தை சுவைத்து உண்பது போல் காணப்படல்.
 3) கசப்பான மருந்தை முகஞ்சுழித்து உண்பது போல் காணப்படல்.
 4) கடுங்கோபத்துடன் சட்டி பானை உடைப்பது போல் காணப்படல்.





ஒரு குறித்த நகரில் A,B,C,D,E எனும் ஐந்து மாணவர்களின் வீடுகள் அமைந்துள்ள விதமும் அவற்றை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன. அத்தகவல்களுக்கு ஏற்ப 5, 6, 7 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

05. E என்பவர் தனது வீட்டிலிருந்து ஆரம்பித்து ஏனைய நான்கு வீடுகளுக்கும் சென்று தனது வீட்டுக்கு மீள வருவதற்கு குறைந்த அளவு தூரத்தில் செல்லத்தக்கதாக இருக்கும் வழிப்பாதை எது?
 1) E → D → A → B → C → D → E
 2) E → B → A → C → D → E
 3) E → D → A → B → D → C → D → E
 4) E → B → A → C → D → E

06. அருகருகே உள்ள இரு வீடுகள் எவை?
 1) A யும் B யும் 2) A யும் D யும் 3) D யும் E யும் 4) C யும் D யும்

16. வரைபடத்தில் உள்ள பெட்டிகளுக்குள் சேவை நிலையங்களின் பெயர்களை எழுதுக.



17. வரைபடத்தின் பக்கங்களில் உள்ள புள்ளிக் கோடுகளில் தூரங்களைக் குறிக்குக.

ஒரு வகுப்பிலுள்ள ஐந்து பிள்ளைகளின் ஒரு மாதத்திற்கான வகுப்பு வரவு ஒழுங்கு கீழே காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கமலன் 21 நாட்கள் | இந்திரா 22 நாட்கள் | அகமட் 18 நாட்கள் |
| சந்திரா 17 நாட்கள் | நிரோசா 19 நாட்கள் | |

18. வகுப்பு வரவின் ஏறு வரிசையில் பெயர்கள் உள்ள வரிசையைத் தெரிவு செய்க.
   1) கமலன், இந்திரா, நிரோசா, அகமட், சந்திரா
   2) சந்திரா, இந்திரா, நிரோசா, அகமட், கமலன்
   3) சந்திரா, நிரோச்ா, அகமட், இந்திரா, கமலன்
   4) சந்திரா, அகமட், நிரோசா, கமலன், இந்திரா

அவ்வைந்து மாணவர்களின் பிறந்த தினங்கள்

| | |
|---|---|
| கமலன் 2003 - 07 - 26 | நிரோசா 2003 - 03 - 04 |
| அகமட் 2004 - 06 - 18 | இந்திரா 2003 - 12. - 16 |
| சந்திரா 2004 - 01 - 10 | |

19. இதற்கேற்ப சரியான கூற்று யாது?
   1) அகமட் சந்திராவிலும் மூத்தவன்
   2) இந்திராவிலும் கமலன் மூத்தவன்
   3) நிரோசா அகமட்டிலும் இளையவன்
   4) கமலன் சந்திராவிலும் இளையவன்

20. இதற்கேற்ப பிழையான கூற்று யாது?
   1) அனைவரிலும் மூத்தவள் நிரோசா
   2) அனைவரிலும் இளையவன் அகமட்
   3) அனைவரிலும் இளையவள் இந்திரா
   4) மூவரிலும் மூத்தவன் கமலன்

2013 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும்.

21. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளின் எண்ணிக்கைகள் முறையே.
   1) 4, 5, 5 2) 4, 5, 4 3) 5, 4, 5 4) 4, 4, 5

22. 2013 ஆம் ஆண்டு சாதாரண வருடம் ஆகும். அதன்படி அவ்வாண்டிலுள்ள திங்கள், செவ்வாய்க் கிழமைகளின் எண்ணிக்கைகள் முறையே
   1) 53, 52 . 2) 52, 52 3) 52, 53 4) 53, 53

23. 2013 ஆம் ஆண்டு 21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தமாகும். இதற்கேற்ப 2009 இல் பிறந்த உமது தங்கை எத்தனையாம் நூற்றாண்டின் எத்தனையாம் தசாப்தத்தில் பிறந்தாள்?
   1) 20 ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தம்
   2) 21 ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்
   3) 21 ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தம்
   4) 20 ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்

◆ ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்ப சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.


24. A - கடன் வாங்கி B - கார் வாங்க C - கமலனுக்கு கார் விருப்பம்
   D - பணம் இல்லை E - கார் வாங்கினான்
   1) B, D,C, A, E
   2) D,B,A,E, C
   3) C,B, D,A,E
   4) C,B,A,E,D


07. அதிகளவு தூரங்களில் உள்ள இரு வீடுகள் எவை?
1) A யும் B யும் 2) A யும் D யும் 3) D யும் E யும் 4) C யும் D யும்

08. ஒரு புகைவண்டி 10 ஆவது கிலோ மீற்றர் கல்லிலிருந்து 16 ஆவது கிலோ மீற்றர் கல்லைக் கடப்பதற்கு 6 நிமிடங்கள் எடுத்தது. புகைவண்டி 16 ஆவது கிலோ மீற்றர் கல்லிலிருந்து முதல் ஓடிய வேகத்தின் இரு மடங்கு வேகத்தில் ஓடினால் 32 ஆவது கிலோ மீற்றர் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்?
1) 4 2) 8 3) 16 4) 32

09. அமலா கமலாவின் மகள் ஆவாள். விமலா கமலாவின் தங்கை. பாலன் விமலாவின் மகன் ஆவான். பாலனும் அமலாவும் சந்திக்கும் போது பாலன் என்ன உறவு முறையைக்கூறிக் கொண்டு அமலாவுடன் பேசுவான்?
1) அக்கா 2) சித்தி 3) பெரியம்மா 4) மாமி

**வினாக்களில் நான்கு அடைப்புக்களில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க.**

10.


11.


12.

| | |
|---|---|
| 2kg சீனியின் விலை | = 1kg கடலையின் விலை |
| 2kg கடலையின் விலை | = 1kg பால்மா பைக்கற்றின் விலை |


எனின் பின்வரும் அட்டவணைக்கேற்ப கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?

| அஜித் | கமல் | குமார் | மயூரன் |
|---|---|---|---|
| 2kg சீனி | 1kg சீனி | 2kg சீனி | 3kg சீனி |
| 1kg கடலை | 2kg கடலை | 2kg கடலை | 3kg கடலை |
| 1kg பால்மா | 3kg பால்மா | 2kg பால்மா | 1kg பால்மா |

1) அஜித் 2) கமல் 3) குமார் 4) மயூரன்

13. மேலுள்ள அட்டவணைக்கேற்ப குறைந்தளவு பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?
1) அஜித் 2) கமல் 3) குமார் 4) மயூரன்

| |
|---|
| 1 போத்தல் நல்லெண்ணெயின் நிறை = 2 போத்தல் தேங்காய் எண்ணெயின் நிறை |
| 1 போத்தல் தேங்காயெண்ணெயின் நிறை = 2 போத்தல் மண்ணெண்ணெயின் நிறை |

14. அவ்வாறாயின் எந்தப்பைகளில் சமமான நிறைகள் உள்ளன?




1) 1உம், 2உம் 2) 2உம், 3உம் 3) 3உம், 4உம் 4) 1உம், 4உம்


15. மேலுள்ள அட்டவணைக்கேற்ப குறைந்தளவு நிறையுள்ள பை எது?
1) 1 ஆவது 2) 2ஆவது 3) 3 ஆவது 4) 4 ஆவது


◆ ஒரு நகரத்தில் பாடசாலை, வைத்தியசாலை, வாசிகசாலை, பஸ் நிலையம் அமைந்துள்ள திசைகளும் தூரங்களும்- பாடசாலை வைத்தியசாலைக்கு ஈசான (வடகிழக்கு) மூலைத்திசையில் 80 மீற்றர் தூரத்தில், வாசிகசாலை பாடசாலைக்கு வாயு (வடமேற்கு) மூலைத்திசையில் 100 மீற்றர் தூரத்தில், பஸ்நிலையம் வாசிகசாலைக்கு நிருதி (தென்மேற்கு) மூலைத்திசையில் 80 மீற்றர் தூரத்தில், வைத்தியசாலை பஸ் நிலையத்துக்கு அக்னி (தென்கிழக்கு) மூலைத்திசையில் 100 மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளன.


25. A - இன்றைக்கு மட்டும் B - வாங்குங்கள் நாளைக்கு C - வாங்க முடியாது
D - உடனே விரைந்து வந்து E - மலிவு மலிவு


1) D,B,A,E,C 2) E,D,C,B,A 3) E,A,D,B,C 4) A,E,D,C,B

26. 
முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1) இரு மடங்கு 2) மூன்று மடங்கு
3) நான்கு மடங்கு 4) ஐந்து மடங்கு



27. 
முழு உருவின் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின்
1) இரு மடங்கு 2) மூன்று மடங்கு
3) நான்கு மடங்கு 4) ஐந்து மடங்கு


28. 
முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1) 20 மடங்கு 2) 8 மடங்கு
3) 12 மடங்கு 4) 16 மடங்கு

29. 
இவ்வுருவை அரியம் ஆக்குவதற்குத் தேவையானது?
1) 1 சதுரம், 1 முக்கோணி 2) 2 செவ்வகங்கள், 1 முக்கோணி
3) 1 செவ்வகம், 1 முக்கோணி 4) 2 செவ்வகங்கள், 2 முக்கோணிகள்

30. 
இவ்வுருவை கனவுரு ஆக்குவதற்குத் தேவையானது
1) 2 சதுரங்கள், 2 செவ்வகங்கள் 2) 2 சதுரங்கள், 1 செவ்வகம்
3) 1 சதுரம், 1 செவ்வகம் 4) 1 சதுரம், 2 செவ்வகங்கள்

31. 
இவ்வுருவை அமைப்பதற்கு கம்பியொன்றில் வளைக்கவேண்டிய சரியான முறை

1) 
2) 
3) 
4) 

32. 
1) 
2) 
3) 
4) 

◆ அடைப்புக்குள் உள்ள பொருத்தமான உவமானத்தைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

கண்சிமிட்டும் குழந்தையைப் போல்
பெருக்கெடுத்த ஆறு போல்
நீல வர்ண ஆடை விரித்தாற் போல்
பச்சைக் கம்பளம் விரித்தது போல்
கும்பல் கும்பலாக குவித்து விட்ட பஞ்சுக் குவியல்கள் போல்
பால் போல் வெண்மையாக.

33. தேயிலைத் தோட்டங்கள் ................................................ காட்சியளித்தன
34. பெருமழை வெள்ளம் ................................................ பாய்ந்தது
35. பூரண சந்திரன் ................................................ காட்சியளித்தது
36. ஆகாயம் ................................................ காட்சியளித்தது
37. வானில் தோன்றிய முகில் ................................................ தோன்றியது
38. நட்சத்திரங்கள் ................................................ மின்னியது.

39 ஆம் 40 ஆம் வினாக்களில் உள்ள சொற்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல் எழுதுக.

39. அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, நான், தங்கை, தம்பி ................................
40. மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா ................................

இவ் வினாக்களுக்குரிய விடைகள்
நாளை வியாழக்கிழமை
(21.07.2016)
வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆